வாழ்நாட்களை-சாதுக்கள் நிந்தனுக்கத்தினும் பிறந்

ஸ்ரீமாகவெண்ணுகை ஸ்வபாவமாயிருக்கும்-எம்பெருமானுடையகு
ணங்களையும் சௌலப்யத்தையுமனுபவித்துப்பிரிந்ததுக்கமும் இ
ராஜத்துக்களின் துக்கமும் ஆத்மாவின் யாதாத்ம்யத்தைப்பற்றிவரு ம
தாகையால் துக்கங்கனத்திருக்கும்- அத்தால் வேற்றேர்வகையில்
கொடிதாயென்கிறுள்.

அ-ம் பாசுரம்.

அவ்விருளுக் இடைந்து அக்கே இக்கே சஞ்சரியாநிற்க இருள்
செறிந்தாப் போலிருப்பதொருகுழியிலேசென்றிழிந்தாள்- அதும்
டலெடுப்பாரைப்போல் கெட்டோடாநிற்குமேஅதைக்கண்டுசகடா
சுரிரணம்பண்ணியசெயலிலே நீயுமகப்பட்டாயோவென்கிறுள்.

இருளின்றிணிவண்ணமாநீர்க்குழியேபோய்..... ... ...*
மருளுற்றிராப்பகற்றுஞ்சிலுநீதுஞ்சாயால் .....*
உருளுஞ்சகடமுதைத்தபெருமானூர்..... .....*
அருளின்பெருநசையாலாழாந்துநாந்தாயே.....*

இருளின்- இருளினுடைய- திணி- கனமான-வண்ணம்-வர்ணத்
தையுடைய- மா- விஸ்தாரமான- நீர்-ஜலத்தையுடைய- குழியே-உப்
புக்கயமே- போய்- மிகவும்- மருளுற்று- அக்கியானத்தையடைந்
து- இராப்பகல்- இவும்பகலும்- துஞ்சினும்- நித்திரித்தாலும்- பக
லில்குரியனும்- இரவில்சந்திரனும்-நித்திரித்தாலும்- நீதுஞ்சாயால்-
உறங்காய்- உருளுஞ்சகட முதைத்த பெருமானூர்- உருண்டுவந்த ச
கடத்தை (மூலையாவு தாழ்த்துவந்த பின்ன கோபத்தாலே) உதைத்
த பெருமானுடைய- அருளிச்- செயலில்- பெருநசையால்-ம
ஹாத்மாவிச்சையாலே-ஆழாந்து-மக்கனமாய்-நொந்தாயே- நோ
படாயாகாதே.

கூ-ம் பாசுரம்.

நொந்தாராக்காதலோடுமெல்லாவியுள்ளுலர்த்த.....*
அந்தாவிளக்கமேநீயுமளிபத்தாய்.....*
செந்தாமரைத்தடங்கட்செங்கனிவாயெம்பெருமான் .....*
அந்தாமத்தன்றுழாயாசையால்வேவாமே.....*

அக்குழிக்கொருகரை காணமாட்டாதே மீளாவேற்து படுக்கை
யே விழுந்தாள்- அங்கொளிற விளக்கைக்கண்டாள்- அதுபட்டம்பி
ரவுகதையொண்ணுதபடி விரஹாஜ்வரம்பற்றி யெரியாநின்றதை
நீயும் நோவுபட்டாயாகாதேயென்கிறுள்.

நொந்தாராக்காதல்தொடுமெல்லாவியுள்ளுலர்த்த மனை

வியாதி யென்றும்- ஆரா- மீளாதவியாதியென்றும்-காதல்நோய்-மி
கமேவியாதி யென்றும்-மூவகைப்பட்டவியாதி - மெல்லாவி- மிரு
துவானவாத்மாவையும் பிராணத்தையும்- உள்ளுலர்த்த- உள்ளெல்
லாமூலர்த்தாநிற்கும் வியாதியென்று நினைத்தாள் - நந்தாவிளக்க
மே-நந்துதல்- நாசத்துக்கும் சங்கோசத்துக்கும்பேர் - சங்கோசத்
தையடையாத தீபமே- நீயும்- அளிய-கண்ணளியையுடைய-தாய்-
உலகத்துக்குத்தாயைப்போல்உபகாரியானவளே-செந்தாமரை-தட
ங்கண்- செங்கனிவாய்- எம்பெருமான்- அவனுடைய-அம்- அழகி
ய- தாமத்தண்டுழாயாசையால்-திருத்துழாய்மாலையிலிருக்குமாசை
யால்-வேவாமே-பாதபீயாநிற்கிறாய்.

ய-ம் பாசுரம்.

வேவாராவேட்கைநோய்மெல்லாவியுள்ளுலர்த்த.....
ஓவாதிராப்பகலுன்பாலேவீழ்த்தொழிந்தாய்.....
மாவாய்பிளந்தமருதிடைபோய்மண்ணளந்த.....
மூவாமுதல்வாவினியெம்மைச்சோரேலே.....

இவள்துக்கமெல்லாந்தீரவந்து சம்சிலேஷித்த எம்பெருமா
னே இனியொருநாளுமென்னைவிடாதொழிய வேண்டுமென்கிறாள்.

உள்ளுலர்த்த-உள்ளுலர்த்துகைக்கு-ஓவாது- விச்சேதமில்லாமல்-உன்பாலே-உன்விஷயத்திலே-வீழ்த்தொழிந்தாய்-அகப்படச்செய்தாய்-மா-குதிரைமுகமாகவந்த கேசியின்-வாய்பிளந்து-மருதினிடை போய்-மருதமரமாயிருக்கிற விருடூத்நின்மத்தியிற்போய் அவன் சாபத்தைத்தீர்த்த-மண்ணளந்த-மூவா-நாசமில்லாநித்தியனே-மூவ்வா-இஜ்ஜகத்திற்காதிகாரணனே-இனி-இனியாகிலும்-எம்மை-சோரேல்-கைவிடாதொழியவேண்டும்.

ர-ம் பாசுரம்.

சோராதவெப்பொருட்குமாதியாஞ்சோதிக்கே.....
ஆராதகாதற்குருகூர்ச்சடகோபன்.....
ஓராயிரஞ்சொன்னவற்றுளிவைபத்தும்.....
சோரார்விடார்கண்டீர்வைகுந்தத்திண்ணனவே.....

இத்திருவாய்மொழிகற்றார் பகவானைப்பெறுதே தோவுபடா
ஸம்ஸாரத்திலிருந்து தோவுபடாதே கண்டாரொல்லாவிதத்
திற்கும் பரமபதத்திலே புகப்பெறுவரொன்றிரு.

சோரா-குன்றலற-வப்பொருட்குமாதியாஞ்சோதிக்கே

திக்கே - சோராத- ஸர்வகாலத்திலும் - சிருஷ்டிகாலத்திலும் சிருஷ்டித்தபின்பு அந்தரியாமியாயிருக்குங்காலத்திலும் ஒரு ஆத்மாவுஞ்சோராமல்-எப்பொருட்கும்- பிரம்மருத்ரேந்த்ராதி சகலாத்மாக்களுக்கும்-ஆதியாஞ்சோதிக்கே- காரணனுமாய் ஜோதிர்ம்யமான ஸர்வேசுவரனுக்கே-ஆராதகாதல்-ஆராத- ஆராமையுடையதிருப்தியடையாத-காதல் - பிரேமமுடைய- குருகூர்ச்சடகோபன்-ஓராயிரஞ்சொன்ன-அவற்றுள்-இவைபத்தும்-சோரார்-விடாமலனுஸந்திக்கிறவர்கள்-வைகுந்தம்-பரமபதத்தை-விடார்-விடமாட்டார்கள்-கண்டீர்-பாருங்கோள் - திண்ணனவே-இதுதிடம்.

உ-ம் திருவாய்மொழி.

கீழ்த்திருவாய்மொழியில் இவருக்குப்பிறந்த வாற்றாமைபேச்சுக்கு நிலமல்லாமல் ஆற்றாமையோடே முடிந்துபோம்படியிருந்தார்-அனந்தரம் அவன்வந்து முகங்காட்டினவாறே ஆற்றாமைப்புக்கிடக்கண்டிலர்-இதுக்கடிகலத்தபோதும் பிரிந்தபோதும் மற்றொன்றுந்தோற்றுதபடியான விஷய வைலக்ஷண்யமாயிருந்த-அதாவது ஸமஸ்தகல்யாணகுணக்ரேயுடைய ஸர்வேசுரத்துவம்-ஆக இங்ஙனே ப்ராஸங்கிகமாகப் ப்ரஸ்துதமான ஈசுவரத்துவத்தை யனுஸந்தித்து அருளிச்செய்கிறார்-முதல்திருவாய்மொழியில் பரமபதார்தன் பரனென்றதனனுபவித்தார்-இத்திருவாய்மொழியில் அவதாரத்தில்பாற்துலஞ்சொல்லிப்பரோபதேசஞ்செய்கிறார்.

க-பாசுரம்.

வஞ்சிவிருத்தம்-பண்-தக்காகம்-தாளம்- ஏழொற்று.

இதை இப்போது சுருட்டிராகத்திலும் ரூபகதாளத்திலும் பாடிக்கொண்டுவருகிறார்கள்.

நின்னன்வீடுமுதன்முழுதுமாய் .....
நின்னின்மீதியனெம்பெருமான்.....
நின்னும்விண்ணுமெல்லாமுடனுண்டநக்.....
நின்னன்கண்ணல்லதில்லையொர்கண்ணனே.....

நின்னன்வீடுமுதன்முழுதுமாய்-நின்னென்றது நின்னுடைமை-ஸ்வாமித்வமென்றபடி-நிடமானவீடென்று பரமபதமாயிற்று விசேஷணமாய்த்திடமான ஆனந்தமாவது திருப்பாற்கடலாகவுமாம்

பிரணைத்தில் ஒன்பதாம் அனுவாகத்தில் ஸ்ரீமஹாவாச்யஸ்ஹா ரஷ்ய:॥என்றதில் இயானத்தினுலே அதிசயித்திருக்கின்ற அந்தப்பாசு சுதருன வியாஸரை மெய்ம்மொழியாள்வென்று சொல்லியிருக்கின்றது மன்றிக்கே வேதபுருஷன் சத்தியஞ்செய்ததை இவருஞ்சொன்னுரோவொழிய வேறில்லை. அப்படி வேதம் பொய்சொல்லிற்றென்று நீசொல்லவேணும்-வேதஞ்சொன்னது பொய்யென்பாரை இல்நீர் துர்ப்பிராம்மணரஞ்விமிவீரென்றுசொன்னேன்-அப்படிச் சொல்லுவேனு (வியாஸப்புரோக்த) மென்றுதானே நாங்கள் நிர்ணயஞ்செய்கருமங்கள் செய்கிறோம்-என்மதத்தைக் காப்பாற்றும் பொருட்டிப்படிவாதித்தேனென்று சொல்லிப்போனுன்.

உ-ம் பாசுரம்.

எபாவம்பரமேயெழுலகும்.....*
ஈபாவஞ்செய்தருளாலனிப்பாரார்.....*
மாபாவம்விடவத்குப்பிச்சைபெய்.....*
கோபாலகோளரியேறன்றியே.....*

எபாவம்பரமே-எ-என்றது-ஓஜு வென்றபடி-அதாவது வேதத்தில் விஷ்ணுவே பரனென்றுசொன்னப்பிரமாணங்களை ஓதினவர்கள் தங்கள்மதத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்ற வேதத்துக்குத்தப்பர்த்தங்களைக்கற்பித்து, தாங்களுந் தங்கள்கற்பனைகளைக்கேட்டவர்களும் நரகத்தையடைகிறார்கள்- வேதங்களைப்படித்தறியாத மூடர்கள் சிவனுக்குவந்தபிரம்ம அத்திஹத்தியையும்- ஆனைக்குவந்த வாபத்தையும் போக்கினது முதலான லீலைகளால் விஷ்ணுபரனென்று தெளிந்திருக்க அவனைப்பற்றுமல் நரகத்தையடைகிறார்கள்- இவர்கள் பாபங்களிருந்தபடி என்னென்று வெறுக்கிறேன்-பரமே - பகவத்கைங்கரியம் பண்ணுவதைவிட்டு இது நமக்குப்பரமாவதை- எழுலகும்-எழுலகங்களிலுமுண்டான பிராம்மண-க்ஷத்திரிய-வைசிய- சூத்திராதிகள், குளவி கூடுபூரிப்பதுபோல் செய்தபாபங்களை- ஈபாவஞ்செய்து-பாவமானது ஈயும்படியாகச்செய்து அழியும்படியாகச்செய்து-காயத்தினிர்மலமையாஇந்தன் திருநாமோச்சாரணத்தினுலே சகலதீவினைகளுந்தீக்கும்படிசெய்து-அருளால்-நீர்ஹோதகத்தினுலே-அளிப்பாராரி-இரக்ஷிப்பாராரி- (உதாஹரணங்காட்டுகிறார்) = மாபாவம்விடவத்கு = அரனுக்குச்சம்பவித்த பிரம்மஹத்தியைப்போக்கும்படி-பிச்சை-பிக்ஷையை-பெய்- இட்ட- கோபாலகோளரியேறன்றியே-என்றதில் கோபாலகோளரி என்பது சிவனுக்குவந்த பிரம்மஹத்தியைப்போக்கினபோது அருளாலிப்பாராரி

கூழிவில்லையென்னை-நிண்ணிதான பரமபதத்தொடக்கமான்எல்லா வாலோகங்களையுமுண்டயனுய்-அன்றியே நிண்ணமென்கிறதை இட்டுவைத்து-விபிமுதல்முழுதுமாய் - மோக்ஷமுதலிய பேறுகளைத் தருபவனென்னவுமாம்-எண்ணின்மீதியன் (மேற்பிரம்மருத்திரர்களுவட்டிய நினைவுக்கு எட்டாத பரமபதமென்று) - சுருதிசொன்ன பேற்றைத்தரிபாண்டன் சிசுபாலாதிகளுக்கு நிர்வேறதாகிருப்பதால் கொடுக்கையால் எண்ணுக்குமேலான கலியாணகுணங்களையுடையவன்-எம்பெருமான்-மண்ணும்-விண்ணும்-எல்லாம்-உடன்-ஏகாலத்தில்-உண்ட-அன்னம்போல்கிரஹித்த-ரக்ஷணம் அவனுக்கு தீதாரகமானையாலே உண்டவென்கிறது-இல்லையாகில் காக்குமென்னவமையும்-நம்கண்ணன்கண்ணனல்லது-கிருஷ்ணனுடைய ரக்ஷகமல்லது-இல்லையார்கண்-வேறுரக்ஷகமில்லை-நிண்ணம்- இதுதிடம்-

சுருதி - மஹோபநிஷத்தில்-நாராயணபரம்பிரஹ்மதத்வம்நாராயணஹ பரம்॥ நாராயணன் பரப்பிரம்மம் சத்தியம் நாராயணனேபரன்என்றசொன்னபடியே ஸ்ரீவேதவியாஸபகவான்-சத்யம்சத்யம்புனஸ்சத்யம்॥ ஊர்த்வபுஜமுச்யதேவேதஸாஸ்த்ரமத்வகனாஸ்தி॥ நதைவம் கேசவாத்பரம்॥ மூன்றுதரம் ஸத்தியமாகக் கையைபுயபரவெடித்துச் சொல்லுகிறேன்-வேதத்துக்குமிஞ்சின சாஸ்திரமில்லை-கேசவனுக்குமிஞ்சின தெய்வமில்லையென்று சொன்னபடியே இவரும் கண்ணன் கண்ணல்லதில்லையார் கண்ணேயென்றருளிச்செய்கிறார்.

ஒரு அத்வைதபிராம்மணன் தான்சிவனுக்குப்பாத்துவம் ஸ்தாபிக்கிறேனென்று என்னுடனேவிரோதிக்கினைசெய்தான்- அப்பொழுது இந்தமஹோபநிஷத்தில் நாராயணன் பரப்பிரம்மமென்று இப்படித்துச்சொல்லி வேதபுருஷன் சத்தியஞ்செய்திருக்க நீயாருக்குப்பாத்துவஞ்சொல்லுகிறுயென்று சொன்னதின்பேரில் அத்தநாராயணனென்றவன் கூவென்றுவாதித்தான்-பின்பு அப்புறத்துவாதியத்தில்-ஹ்ரீஶ்சதேலக்ஷ்மீஶ்சபத்ன்யௌ-என்றபூமிதேவியும்லட்சுமிதேவியும் அவனுக்குப்பத்தினிகளாயிருப்பர்களென்று சொல்லியிருக்கிறதே இவர்கள்யாருக்குப்பத்தினிமார்களென்றுகேட்டதற்குமாமொழிசொல்லாமல் ஓடிப்போனுன் - மற்றொருநாள் வியாஸர்சத்தியஞ்செய்ததைப் பிரஸங்கஞ்செய்துகொண்டிருக்கையில் மற்றொருஅத்வைதபிராம்மணன் வியாஸர்பொய்சொன்னுரர்அவரைவாதம்பண்ணப்போய்சென்றான்- எதற்கேதுராணத்தில்-பி

நறுநெய்பூவினைப்பூமகடன்னை.....
வேறன்றிவின்டொழுத்தன் னுள்வைத்து.....
மேறன்னைமீதிட நிமிர்ந்துமண்கொண்ட.....
மாறனின்மிக்குமோர்தேவுமுளதே.....

இப்பாசுரத்துக்குப்பிரமாணங்களும் விவரங்களும் சது-சதும் பக்கத்தில்காண்க-மேறன்னை-மேல்தன்னை-மேல்லோகங்களை- மீதிட-ஆக்கிரமிக்கைக்காக.

தேவுமெம்பொருளும்புடைக்கப்.....
பூவிலுன்முகனைப்படைத்த.....
தேவனெம்பெருமானுக்கல்லாற்.....
பூவும்பூசனையுந்தகுமே.....(ச)

இதற்குப்பிரமாணம்-கூம் பக்கத்தில்-ஸ்ரஜாபதிரேகம்- என்றகுறியில்காண்க- இங்குதேவும் என்றது உருத்திரன்முதலானவர்களை- எப்பொருளும்-மனுஷ்ய-திர்யக்ஸ்தாவரங்களும்.

தருஞ்சீர்த்தன்றனிமுதலினுள்ளே.....
மிருந்தேவுமெப்பொருளும்படைக்கத்.....
தருந்தாலத்தாமனாக்கண்ணனெம்மான்.....
மிருஞ்சோதிமேலதிவாமெரோ.....(டு)

தருஞ்சீர்த்தன் - திருஷ்டிக்கடியான சங்கல்ப ரூபனத்தைச் சொல்லுதல்-தனிமுதலினுள்ளே-அத்விதியகாரணமான தன்சங்கல்பத்திலே-மேலதிவார்-அவனைவிடில் மேலானவனுண்டென்று-அதிகார்-எவர்.

எவரும்பானவையுமெல்லாப்பொருளும்.....
கவர்வின்றித்தன்னுள்ளொடுங்கநின்ற.....
-பவர்சொன்ஞானவெள்ளச்சுடர்மூர்த்தி.....
அவரெம்மாழியம்பன்னிபாமோ.....(எ)

எவரும்-சகலசேதனர்களையும்-யாவையும்-தகல அசேதனங்களையும்-எல்லாப்பொருளும்-கவர்வின்றி-ஒருவருக்கொருவர் இம்சையின்றியிலே- தன்னுளொடுங்கநின்ற-பவர்கொள்-விஸ்தாரத்தையுடைய-ஞானவெள்ள-ஞானப்பரவாஹரூபகுணஞான-சுடர்மூர்த்தி-தேஜோமயமான திவ்யவிக்ரஹத்தையுடையனான-ஸ்ரீமன்னாராயணனிடத்தில்-ஆம்பலியர்-சந்தாக்யனருளையுண்டு

பள்ளிபாலிலேயழுலகுங்கொள்ளும்.....
வள்ளல்வல்வயிற்றப்பெருமான்.....
உள்ளுளாரறிவாரவன்றன்.....
கள்ளமாயமனக்கருத்தே.....(அ)

உள்ளுள்-மனசில்-உள்ளுளாய்கள்ளமாயமனக்கருத்தையறிவார்.

கருத்திற்றேவுமெல்லாப்பொருளும்.....
வருத்தித்தமாயப்பிரானன்றியாரோ.....
திருத்தித்தின்னிலைமூவுலகுந்தம்முள்.....
இருத்திக்காக்குமியல்வினரோ.....(ஆ)

கருத்தில்-தம்முடையநினைவில்-தேவும்-பிரம்மருத்ராதிதேவர்களும்-எல்லாப்பொருளும்-சகலபதார்த்தங்களும்- வருத்தித்த-உண்டாக்கின-திருஷ்டித்த-மாய-ஆச்சரியகுண சேஷ்டிதங்களுடைய-பிரானேயன்றி-சர்வேசுவரனையொழிய-ஆரோ-ஆர்-திருத்தி-சிஷித்து-தின்னிலை-திடமானஸ்திதியுண்டாக்குகைக்கு - மூவுலகும்- மூன்றுலோகங்களும்-தம்முள்-இருத்தி-அவரவர்களுக்குபயோகமான ரக்ஷணசித்தையை திருவுளத்திலேவைத்து- காகும்-இரக்ஷித்தின்றபடியின்றி- ஸ்வபாவத்தை புடைத்தானவரொவர்- என்பது- சிரதபுத்திநிலத்தாத்திரோயாயவதரித்து வேதார்த்தங்களைப் பிரவர்த்திபித்தும் - திரேதாயுகத்தில் வேதத்தில் பூர்வபாகத்தில்சொன்ன தருமங்களைத்தா மனுஷ்டித்தும்- வேதாந்தத்தில் சொன்னசேஷித்வபாரதந்திரிய வதுஷ்டானங்களை லட்சுமணப்பெருமாள்ஸ்ரீபாதாந்தானைக்கொண்டு அனுஷ்டிப்பித்தும் துவாபரயுகத்தில் கண்ணனுக்கருமையானபக்தியோகங்களையும்- ஸ்ரபத்தியையு முடனே தித்தும் கலியுகத்தில் ஸ்ரீபராங்குசாயவதரித்துப்பரபக்தி- பரஜ்ஞான- பரமாபக்திகளாகிற விஷ்ணுபக்தியைப் பிரதிஷ்டைசெய்விக்கும்வடபாவன்-என்றபடி.

காக்குமியல்வினன்கண்ணபெருமான்.....
சேர்ச்சைசெய்துதன்னந்தியுள்ளே.....
வாய்த்தவிசைமுகவிந்திரன்வானவர்.....
தீர்த்தனென்றெப்பவுலகுகளே.....(கூ)

காக்குமியல்வினன்-(வேதம்நவவியாகரணத்தோடுகூடியிருக்கையால்)-பூர்வபாகத்தில்சொன்னதைத்தான் மறுதலையவதரித்து ஸ்ரீகிருஷ்ணாவதாரத்திலுண்டான உத்தரபாகத்தில்-சேர்த்தத்தைதலையவதரித்து வேதத்தைத்தெளிவுபடுத்தியானமான பிரம்மருத்ரா

ம்-பாரதம்-புராணங்கள்செய்துங்காக்கும்ஸ்வபாவனான-கண்ணபி
ருமான்-சேர்க்கைசெய்து -சம்மாகாலம்வந்தவாறே தேவமநுஷ்ய
யாதிகளைத்தன்பக்கலிலேசேருகையாகிறசெயலைச்செய்தென்றபடி
கள்வாவெம்மையுமேழுலகுநின்.....
உள்ளேதோற்றிபவிறைவவென்று.....
வெள்ளேறனுன்முகனித்திரன்வானவர்.....
புள்ளூர்திகழல்பணிந்தேத்துவரோ.....(2)

கண்ணன் கைலாயத்துக்கெழுந்தருளினபோது பாரதயுத்த
வம்சத்தில் - கஷ்டிப்ரஹ்மணோ நாம - ஈஷோஹாஸ்ய தேஹினாம் - அவ
தவாகீஸ்பூலோகஸ்ய ஜ்ஞேயனாமவான் - என்கிறபடியே- கதன்று
ப்ரம்மாவுக்குப்பேர்-சமஸ்தாத்மாக்களையும் நியமிக்கிற நாமத்தை
திருமேனியிலுண்டாயிற்றென்று இவன்சொன்னபடியால்- கள்வாவெம்மையு
மேழுலகுநின்னுள்ளேதோற்றிபவிறைவவென்ற வெள்ளேறனும்
கெனும் நான்முகனும் இந்திரன் வானவர் புள்ளூர்திசழல்பணிந்
த வற்றுவரென்கிறார்.

ஏத்தவேழுலகுங்கொண்டதோலக்.....
கூத்தனேக்குருகூர்ச்சடகோபன்சொல்.....
வாய்த்தவாயிரத்துள்ளிவைபத்துடன்.....
ஏத்தவல்லவர்க்கில்லைபாரூணம்மே.....(3)

உடன்-பக்தியுடன்-மனப்பூர்வமாய்-அல்லதுபாகவதாளுடன்
ஏத்தவல்லவர்க்கு-இப்போரூணமே-ஊனமில்லை-(கருதி-தேஹ
ஸ்திதேய:-என்று காரணவஸ்துவே நியானத்துக்குரியவனென்
சொல்லியிருக்க அதைவிட்டு இதரதேவர்களைப்பாத்துவரு
ப்து அத்தால் தன்பாபங்களை விநாசஞ் செய்துகொள்ளாமல் அ
ல்நாகங்களில் அனுபவிக்கையாகிற) - ஊனம் இத்திருவாய்மொ
ழியில் நம்பிக்கையுடனேத்தவல்லவர்க்கில்லையென்கிறார்.

நம் திருவாய்மொழி.

வாயுந்திரையுகளில் பிறந்த வார்த்தைநீர் வந்தசம் தெளி
ரோமத்தைச் சொல்லுகிறது நிண்ணன் வீட்டில் - அவ

ர்த்துவம் நடுவில் ப்ராஸங்கிகமாய் இவருடைய வினைமை சொல்
ம்படி பண்ணிற்று- தாம்பெற்ற பேற்றின் கனத்தைப்பார்த்தார்
து தம்முடைய சுகிர்தாதிகளால் வந்தவையர் யிருக்குமாகில் அ
வுபட்டிருக்கும் - ஈசுவரனுடைய நிர்வேதுக்கிருபையால் வந்த
கையால்முடிவில்லாததாயிருந்தது-தாமனுபவித்த அனுபவத்து
தனே எல்லாரையுங்களுமுண்டாய் அதுக்குச்சமமும் அதிகமு
மிலாத தொன்று யிருந்தது - இப்படிப்பட்டவனுபவத்துக்கு
ாத்ருஷையா வாசாமொன்று பார்த்தவிடத்தில் இங்கு அநித்தியமா
சரீரத்தைப் போஷிக்கிறதே பேருகவெண்ணி நித்தியனானவாத்
மவஸ்துவுக்கு க்ஷேமத்தைத்தேட நினைவற்றவர்களாயிருக்கிறார்கள்.
(ஞானமில்லாதவர்களைமிருகத்துக்குச்சமானமாகச்சாஸ்திரஞ்சொ
லியிருக்கையால்)இவர்களைவிட்டு இவ்வகைப்பட்ட அவிவேகமில்
ாத நித்தியசூரிகள் திரளிலேபோய்ப்புக்கனுபவிக்கப்பெறுவதெ
போதென்று அனவாப்தியோடே தலைக்கட்டுகிறார் - அனவாப்தி
டையாமை- வாயுந்திரையுகளில் ஆற்றுமைக்கு அறிவுநடையாடா
திரியக்குகளையும் அசேதனங்களையுஞ்சேர்த்தாரங்கு- இங்குச்சம்
ஸ்லேஷித்தால் வந்தபிரீதிக்கு அறிவு ஸ்வபாவமாகவுடைய நித்திய
சூரிகளைத்தேடுகிறார்.

க-பாசுரம்.

கலிவிருத்தம்-பண்-நாட்டம்-தாளம்- எழுசீர்த்து.

இதை இப்போதுமுகாரிராகத்திலும்- ஆதிதாளத்திலும்பாடி
கொண்டுவருகிறார்கள்.

முதல்பாசுரம்-தன்மனசைக் கொண்டாடுகிறார்.

ஊனில்வாழுயிரேநல்லைபோவுன்னைப்பெற்று.....
ானவர்பெருமான்மதுசூதனென்னம்மான்.....
ம்பானுமெல்லாந்தன்னுள்ளேகலந்தொழிந்தேதான்.....
ாலும்பாலுநெய்யுங்கன்னலுமமுதுமொத்தே.....

ஊனில்வாழுயிரே-ஊனில்- சரீரத்தில்- வாழ்- வர்த்திக்கிற-உ
ிரே- மனசே- மனசை உயிரென்பானேன்னில்- மனம் (உச)
வக்கினி லொன்றுப் ஆத்மாவின்கியானமான தருமனின்றவா
ாலே மெய் - வாய் - கண் - மூக்கு - செவிகளில் பிரவேசித்து
ிபக்களை கிரஹிக்கக்கடவதாய் சாஸ்திரஞ் சொல்லுகையாலே
னத்தை இந்தமனசு இதர விஷயங்களில் மூட்டி நசிப்பியாமல்
வ்விஷயத்தில் அநுவயித்து உஜ்ஜீவிக்கும்படிசெய்த உபகார
ினத்து உயிர்என்ற ஆத்மாவைச்சம்போதிக்கிறும்போலே

மனசை உயிரேயென்று சம்போதிக்கிறார் - நல்லீரோ - போவென்
றது வாவென்றபடி - போ - வென்று சம்போதிக்கவுமாம் - நல்லீர்
போவென்று முழுச்சொல்லாய் நல்லீரநல்லீரென்னுதல் - நடுவே
யென்னைக்கொண்டாடிற்றதென்னென்ன - உன்னைப்பெற்று-பத்த
ரேறதுவாய்ப் போந்த நீமோக்ஷமேறதுவாகப் பெற்று - ஈசுவரன்
என்று முண்டி - தக்கசம்பந்தமும் அறிந்து - (எதிர்சூழல்புக்கே
னெனத்தார் பிறப்புமெனக்கே யருள்செய்ய) என்கிறபடியே அவன்
அவதரித்துத் திரியா நிற்கவும் நீ அனுகூலியாதே யன்றே நெடுங்
காலமிழந்தது - இன்றுநீபனுகூலித்தன்றே இப்போது பெற்றது - நீ
பெற்ற பேறேதென்ன - சொல்லுகிறார்மேல் - வானுளார் பெரு
மான் மதுசூதனென்னம்மான்தானும் - யானும் - எல்லாந்தன்னுள்
ளே கலந்தொழிந்தோம் - ஆயிரத்திலொன்று போலும் கடலிலே
குளம்படிபோலும் தானும் நானுமான சேர்த்தியிலே எல்லாஸ்தி
களும் பிறக்கும்படி சம்சிலேஷித்தோம் - பாமபதத்திற்புக்காலும்
இப்பேற்றை யசையிட்டிருக்குமித்தனை - அப்கேதற்றமாகச்செய்
யலாவதில்லை - இதிலுடைய அசிச்சேதமேயங்குள்ளது - என்போல்
கலந்ததென்னில் - தேனும் பாலு நெய்யுங் கன்னலு மமுதமொத்
தே - இதுக்கு ஆளவந்தா ரருளிச்செய்தாராகத்திருமாலையாண்டான்
பணிக்கும்படி. தேனுந்தேனும், பாலும்பாலும், அப்படியே மற்
றதுகலந்தாப்போலென்று - எம்பெருமானரு ளிச்செய்யும்படி
தேன் பால் நெய் கன்னல் அமுதமென்கிற விவற்றை இன்னுமாக்
கூடைய பதார்த்தங்களுக்கெல்லாம் உபலக்ஷணமாக்கி எல்லாவற்
களும் பிறக்கும்படி சம்சிலேஷித்தோமென்கிறரென்று - சருதி
सर्व्वगन्धस्सर्व्वरसः॥ என்று எம்பெருமான்திருமேனியில் ஸர்வகந்
தங்களும் ஸர்வரஸங்களு முண்டாகிறதாய்ச்சொல்லு மவ்வோடேயொ
ரு கலந்தது.

ஒத்தார்மிக்காரையிலபாபமாமாயா.....
ஒத்தாயெப்பொருட்குமூழியாயென்னைப்பெற்ற.....
அத்தாயாய்த்தந்தையாயறியாதனவறிவித்த.....
அத்தாநீசெய்தனவடியேனறியேனே..... (உ)

ஒத்தார்-உனக்குச்சமானமானவர்களையும்-மிக்கார்-அதிசயமான
வர்களையும்-இலபாய-இல்லாத-மாமாயா-சருதி- सत्यमात्मा
क्षुच्चदृश्यते॥ அந்தநாராயணனுக்குச் சமானமானவர்களும்
மானவர்களு மில்லை என்றசொன்ன

விற்சொன்ன சுருதிகளுக்கு விவரமாயிருப்பதை யருளிச்செய்
தார் - ஒத்தாயெப்பொருட்கும் - எப்பொருளுக்கும் ஒத்தாய் - தேவர்க
ளில் உபேந்திரனும் - மனுஷியர்களில் ராமகிருஷ்ணாவதாரமாயும் -
திரியக்குகளில் மச்சிய - கூர்ம - வராஹ - நாரசிங்கமாயும் - ஸ்தாவரங்க
ளில் சாய்ந்த மாமரமாயுமவதரித்தாய் - உயிராய் - எப்பொருளுக்கும்
உயிராய் - இச்சேதனன்தான் தனக்குப்பார்க்கும் ஹிதத்தைப்பார்க்
கக்கடவனுப் - தாரகனுயென்னவுமாம் - என்னைப்பெற்ற வத்தாயாய் -
த்தையாய் - அறியாதனவறிவித்த - அறியப்படாதவர்த்தங்களை யறி
ப்பண்ணின - அத்தா - ஆசாரியனுமான - ஸ்வாமி - சுருதி - मातापि
तानिवासश्शरणंसुहृत् गतिर्नारायणः॥ பிரம்ம ருத்ராதிமு
தல் எறும்புகடையாக வாவருக்கும் ஸ்ரீமந்நாராயணன்மாதா - பிதா -
தாதா - இருப்பிடம் - இரக்ஷகனும் - மோக்ஷமார்க்கத்தைத்தரு மாசா
ரியனுமாய் நின்றுனென்று சொல்லியிருக்கின்றது - மற்றொருசுருதி
यः - गुरुरेवपरं ब्रह्म॥ गुरुरेवपरायणं॥ गुरुरेवपरः कामः। गुरुरे
वपरंधनं॥ गुरुरेवगतिः॥ குருவைப்பரப்பிரம்மமென்றும், அவர்
செய்த உபகாரத்தைச் சார்வகாலமுநினைத்துப் பாராயணம்பண்ண
வேண்டுமென்றும், குருவையே தாரபுத்ராதிகளைப்பார்க்கிலும் வி
சேஷமாகப் பக்திபண்ணி குருவையே பரமமான தனமென்றும்,
குருவின்பாதமே மோக்ஷத்துக்குப்பரமமானதி என்றுஞ் சொல்
லியிருக்கின்றதை - அறியாதனவறிவித்தவத்தாநீ செய்தனவடியே ன
றியேனே - என்றருளிச்செய்தார்.

அறியாக்காலத்துள்ளேயடிமைக்கணன்புசெய்வித் .....*
றியாமாமாயத்தடியேனைவைத்தாயால் .....*
றியாமைக்குறளாய்நிலமாவலிமூவடியென்... ... .*
றியாமைவஞ்சித்தாயெனதாவியுட்கலந்தே..... ... ...(ஊ)

இத்தப்பாசுரத்துக்கு ஆளவந்தா ரருளிச்செய்தாராகத் திரு
மாலையாண்டான், அறியாமற்குறளாய் நிலமாவலி மூவடி என்று அ
றியாமல் வஞ்சித்தது போல் அறியாக்காலத்துள்ளே எனதாவியுட்க
லந்து அடிமைக்கணன்புசெய்வித்துவைத்துப் பின்னும் அறியா
மாயத்திலே யடியேனைச் சீரழித்தோடே இன்னம் வைத்திருக்கி
றாயால்- இதென்னவாச்சரியமென்று வெறுப்புத்தோன்ற வருளி
ச்செய்ததாய்ப்பணித்தார்- இதை எம்பெருமானுர்மேட்டருளி முன்
[illegible] நடவாநின்ற நடுவே
[illegible] - இவ்வளவாயிற்றலை - அறி

யாமாமாயத்தடியேனை-அறியாமற்குறளாய் நிலமாவலி மூவடியென்
று வஞ்சித்ததுபோல் அறியாக்காலத்துள்ளே என தாவியுட்கலந்து
அறியாமைவஞ்சித்து அடிமைக்கண்புசெய்வித்துவைத்தாய்-ஆல்-
இதென்ன வாச்சரியமென்று இதையுமொரு உபகாரமாயருளிச்
செய்தார்-நீர் குருவுக்குமிஞ்சின சிஷியராயிராநின்றீரொன்று கால
க்ஷேபத்தை ஆறுமாஸம்நிறுத்தினீர்-இதைத் திருக்கோட்டியூர்நம்பி
கேள்விப்பட்டுக்கோயிலுக்கெழுந்தருளி ஆண்டானைக்கண்டிநீரே
ன்காலக்ஷேபத்தை நிறுத்தினீர்-(சாந்தீபனிடத்தில் கண்ணன்வேதா
த்தியணஞ்செய்ததுபோல்) உம்மிடத்தில்குருமுகமாயுபதேசம்பெ
றுவிடில் இரந்தம்பலியாதென்ற சாஸ்திரமரியாதைக்குக் இரந்தஞ்
சேவிக்கிறோமொழிய ஆநிசேஷாவதாரரான அவருக்குத்தெரியாத
வர்த்தமுமுண்டோஅவர்சொன்னபிரகாரம் ஆளவந்தாரருளிச்செய்
ய நான்கேட்டிருக்கிறேன் இரந்தம்நடத்துபென்ன - பின்பு கோம
மாய் இவரருளிச்செய்யும் அர்த்தங்களுக்குச் சந்தோஷித்துக்கொ
ண்டிநடத்தினீர்-அறியாமாமாயத்தடியேனை-உஉ-உரு-ம் பக்கத்தில்
ல்சொல்லியிருக்கிறபடியேபிரம்மருத்திராதிகளாலறியவசக்தியமா
ன பிரகிருதியாகியமாயையிலகப்பட்டுப்பிறந்திறந்துகொண்டிருந்
தவடியேனை-அறியாமல்-மஹாபலியையறியாமல்-குறளாய்- குட்டை
ப்பிரம்மசாரியாய்-(நிலமாவலி மூவடி என்று)- மழலைச்சொற்களா
லே முன்சொல்லவேண்டியதைப்பின்சொல்லியும், பின்சொல்லவே
ண்டியதை முன்சொல்லியும், அவனை வஞ்சித்ததுபோல்- எனதாவி
யுட்கலந்து-அறியாக்காலத்துள்ளே - அறிவுநடையாடாதகாலத்தில்-
அடிமைக்கண்- லகங்கரியத்தில் அன்புசெய்வித்து-ருசியுண்டாக்கி-
வைத்தாய்-கிருபைசெய்தாய்- அறியாமைவஞ்சித்தாய் (என்தனிநெ
ஞ்சைவஞ்சித்து)-என்றருளிச்செய்தபடியே என்னையுமறியாமலிப்
படிப்பட்டஇதத்தைச்செய்தீர்-ஆல்-இதென்னவாச்சரியமென்றார்.

எனதாவியுட்கலந்தபெருநல்லுதவிக்கைமா.....
னெனதாவிதந்தொழிந்தேனினிமீள்வதென்பதுண்டோ.....
எனதாவியாவியுநீபொழிதேமுமுண்டவெந்தாய்.....
எனதாவியார்யாருநந்தநீகொண்டாத்தினையே.....(உ)

லர்வேசுவான் இவருக்கு மதிநலமருளினபடியால் நலத்தின்
காரியமான பக்தி யதிசயத்தாலே தம்முடைய ஆத்மவஸ்துவை
யவனுக்கு ஸமர்ப்பித்தாகிலும் நெஞ்சாற்றலத்தீர்த்துக்கொ
வோமென்று தன்னுடைய வாத்மாவை ஸமர்ப்பித்திரார். எனதா
வியுட்கலந்த பெருநல்லுதவிக்கைமாறு - எனதாவியுட்
லென்ற தனியாலே- வஞ்சித்தடியேன்சண்டாளதிர்யோனியிலே

ப்போலே என்றுதன்னை யனுபந்திக்கிறார்-உட்கலந்த- அதுதன்னி
லுங்கடக்கநின்று திருவடிகளைத்தந்து போகையன்றிக்கே எல்லா
விங்களுந்தன்னிடத்தி லுண்டாகும்படிகலப்பதே என்கிறார் - பெ
ருநல்லுதவிக்கைமாறு - உதவி - நல்லுதவி - பெருநல்லுதவி
என்று மூன்று வகையாக்கிமூன்றுக்கும் ஸ்வாரஸியங்கற்பிக்கிறார்-
உதவி-நிர்ஹேதுவாயுபகரிக்கை - நல்லுதவி- பிரதியுபகாரம் பெ
றுமே யுபகரிக்கை- பெருநல்லுதவி-தன்பேறாக உபகரிக்கை- அதா
வது அன்றீன்ற கன்றுக்குத்தாயிரங்கி முன்னின்ற கன்றையும் புல்வி
டவத்தவர்களையுங் கொம்பிலுங் குளம்பிலும் பெற்றுமாப்போலே
இச்சேதனனுல் தனக்கொரு பிரயோஜன மில்லாதிருக்கச் செய்தே
இவர்களை ரக்ஷிக்கிறதே தனக்குப் பேறாகநினைத்து ரக்ஷிக்கைதன்
பேறென்றபடி- எனதாவிதந் தொழிந்தேன்- என்னுடையவாத்மா
வைத்தேவர்திருவடிகளுக்குஸமர்ப்பித்தேன்- அழகிதுநீஜமோ வெ
ன்றான்- இனிமீள்வதென்பதுண்டோ-இனிமீட்பதென்பதுண்டோ
இனிதிரும்புமென்கிறதுண்டோ- அழகிதுஇரண்டாந்திருவாய்மொ
ழியில் யான் எனதென்று (அனுகரித்துச்) சொல்ல வஞ்சி(நீர்தும
தென்றிவை வேர்முதல் மாய்த்திறை-சேர்மின்) என்று பராளுக்கு
பதேசித்த நீர் இத்திருவாய்மொழியில்- எனதாவியுட்கலந்த வென்
றும் எனதாவிதந் தொழிந்தேனென்றுஞ் சொன்னீரோ யாருடைய
சொத்தையாருக்குத்தந்தீர் என்று ஆராய்ந்து பாருமென்முன்-கரு
திகளில்-யஸ்யாத்மாசரீரம்॥ என்று யாதொருநாராயணனுக்கு இவ்வா
த்மாக்கள்சரீரமென்று சொல்லியிருக்கையால் ஈசுவரன் சரீரியாஞ
ன்-யஸ்யாஸ்மி॥என்று யாதொருநாராயணனுக்கு நான்சேஷபூதனுமி
றேனென்றும்-அஹமஸ்மிநமமபகவதஏவாஹமஸ்மி॥ எனக்குநான்
உரியவன் அன்று பகவானுக்கேநான்சேஷபூதனுமிறனென்றும்-பு
ராணங்களில் -ஸ்வத்வமாத்மநிஸஞ்ஜாதஸ்வாமித்வம்ப்ரஹ்மணிஸ்திதம்॥ சொத்
தென்பது ஆத்மாவினிடத்தி லும்ஸ்வாமித்துவமென்பது பரம்மத்தி
னிடத்திலு நிற்பதமாயிருக்குமென்று சொல்லியிருக்கையால் எனதா
வியென்றும் எனதாவிதந்தொழிந்தேனென்றுஞ் சொன்னது தப்
பே-ஏகாந்தத்தில் ஸ்ரீஸ்தவத்தைத்திருடி ஓலக்கத்தில் நான்ஸ
மர்ப்பித்தேனென்று சொல்லுவாரைப்போலிருக்கின்றதென்றுமு
ன்சொன்னசருதிகளைத் திருவுளம்பற்றி (எனதாவியாவியுநீ) என்கி
றீர்-என் ஆத்மா உனக்குச்சரீரமாய் நீசரீரியாகையால் புராணம்-

ஈஸ்வரனாவானெருவன்ஈசுவரனுடையசொத்தானதன்னைத்த
ன்க்குத் தானுரியவனென்று நினைக்கிருளே ஆத்மாவைத்திருடின
அத்தத்திருடனுலே என்ன பாபம்பண்ணப்படவில்லை- எல்லாப்பா
பக்களும் பண்ணப்பட்டனவென்றபடியால் ஸர்வக்ஞன் என் னி
னைத் திருக்குமென்று எடுத்திக்கிறார்- ஆத்மஸமர்ப்பணம் பண்ணுவி
டுவிர்க்கும் முக்திகொடுக்கும் பிரபந்தம் ஸம்பவிக்கும்-ஸமர்
ப்பிக்கில் அவன்சொத்தை யவனுக்குஸமர்ப் பித்ததாகிறது-ஆனால்
செய்யவேடிப்ப தென்னெனில்- ஸர்வமுக்திபிரஸங்க பரிஹாரார்த்தி
மாகவும்-நமக்குத்திருவடி யுண்டென்றுதம்புவதற்குப்புத்திஸ்மா
தனை நிமித்தமாகவும்- சரதன்னிய காரியமாயும்- ராகப்ராப்தமா
யும் (சேஷித்வ பாரதந்திரியஸ்வரூபத்துக்குஉசிதமாயும் - விலக்
காமையைப்பிரகாசம்பண்ணக்கடவதாயுமிருக்கையால் பக்திதசை
யில் ஆத்மஸமர்ப்பணம்பண்ணவேணும்-இவனதசையில் (தந்தநீ
கொண்டாக்கினை) என்கிறபடியே சாஸ்த்ரங்களையும் அவற்றைக்
கொண்டு விவகரிப்பதற்கு (ஸ்தைர்யான) ஸ்வதந்த்ர புத்தந்த
தீ ஞானரூபமாய்வந்து நிர்ஹேதுகதிருபையால் அங்கீகரித்தா
னென்றறிவிக்கவேண்டும்-பொழிலேழுமுண்டவெந்தாய்-பிரளயா
பத்திலே வயிற்றிலேவைத்து இரகூஷித்தவிளல்தெரியாதோ இத்தஜ
ந்து உன்னுடையசொத்தென்று-எனதாவிபார்-கொடுக்கும்வஸ்து
பாரதந்த்ர்யாளர்-கொடுக்குமவன்யாருடைய உடைமை-ஈசுவரன்சொ
த்தை நான்ஸமர்ப்பித்தேனென்னக்கடவேனே-தந்தநீகொண்டாக்கி
னவேமுதலில் அவயவங்களைத்தந்த நீயே இன்று ஆசார்யனுமெழு
த்தருளியடிமைகொண்டாய்.

இனியார்ஞானக்களாலெடுக்கலெழாதவெந்தாய்..... .....*
கனிவார்வீட்டின்பமேயென்கடற்படாவமுதே.....*
தனியேன்வாழ்முதலேபொழிலேழுமேனமொன்றாய்.....*
தனியார்கோட்டில்வைத்தாயுனபாதஞ்சேர்ந்தேனே .... (இ)

இனி- என்றபதம் மேலேதுலயம்- ஆர்ஞானங்களாலெடுக்க
வெழாதவெந்தாயினியுனபாதஞ்சேர்ந்தேனே- கனிவார்வீட்டின்ப
மேகனிவார்-நீயென்றால் உட்கனிந்தவர்களுக்கு - வீட்டின்பமே-
மோக்ஷசுகமானவனே-அன்றியே நீயென்றால் இனியராயிருக்குமவ
ர்கள் இருப்பிடத்திலே அர்ச்சாவதாரமாயெழுந்தருளியிருந்து அவ
ர்களுக்கு ஆனந்தத்தைவிளைக்குமவனென்னவுமாம்.

சேர்ந்தார்தீவினைட்டருநஞ்சைத்தின்மதிலயத்.....*
தீர்த்தர்தம்மனத்துப்பிரியாதவருயிராச்.....

சேர்ந்தேதேபோகல்கொடாச்சடனையரக்கியைமூக்.....*
கீர்ந்தாயையடியேனடைந்தேன்முதன்முன்னமே..... (உ)

சேர்ந்தார்-ஸ்ரீவிபீஷணனப்போன்றவர்கள்-அவர்களுடைய
தீவினைகளுக்கு(ஆற்றவொன்னாத நஞ்சானவன்)-நின்மதியை-சேர்
ந்தவர்களுக்குத்திடமான மதியைக்கொடுக்குமவன்-அம்பரீஷன்மு
ன்னே எம்பெருமான்இந்திரனுய்வந்துஉனக்குவேண்டுவதைவேண்
டிக்கொள்ளென்ன நானுன்னை வந்திக்குமவனல்லேனென்றுன்-தீர்
ந்தார் (உனக்கேபறக்கொண்டிட்டுநீ) என்கிறபடியே எம்பெருமா
னுக்கேயடிமைபென்றிருக்குமவர்கள்-தம்மனத்துப்பிரியாது- தெ
ரிவிப்பிரியாதவிருக்குமவன்-அவருயிர-அவர்களாத்மாவை-சேர்ந்
தேதேபோகல்-உன்னைப்பிரித்து உருகும்படி-கொடா- கொடாத-சட
னை-ஜோதிஷ்யமான திருமேனியையுடையாய்.

முன்னல்யாழ்பயினூனரம்பின்முதிர்சுவையே.....*
பன்னலார்பயிலும்பாளைபவித்திரனே.....*
கன்னலேயமுதேகார்முகிலேயென்கண்ணே.....*
நின்னலாலிலேன்காணெண்ணேநீகுறிக்கொள்வே..... ... . . (எ)

குறிக்கொள்ஞானங்களாலெனைநூழிசெய்தவமுங்.....*
பிறிக்கொண்டிப்பிறப்பேயிலநாளிலெய்தினென்பான் .....*
உறிக்கொண்டவெண்ணெய்பாலொளித்துண்ணுமம்மான்பின் .....*
நெறிக்கொண்டநெஞ்சுளுப்பிறவித்துயர்கடிந்தே... ... ...(அ)

குறி-பார்க்கிறது-இயாபகத்தில்கொள்ளுதல் - குறிக்கொள்ஞா
னங்களால்-எச்சரிக்கையைக்கொண்டிருக்கிற ஞானயோக மார்க்கத்
தாலே-எனைநூழி-அனேகதற்பங்கள்-செய்-செய்யப்பட்ட- தவமும்-
தவத்துக்குப்பலனான மோக்ஷமும்-இப்பிறப்பே- இந்தஜன்மத்தில்
தானே-எய்தினென்-அடைந்தேன்-இந்த ஜன்மமெல்லாங் கூடியோ
வென்னில்-சிலநாளில்-ஸ்வல்பகாலத்திலே என்கிறார்- அதாவது (சா
மகலோகத்துக்குப் பொருள்கேட்குமனலில்) என்றபடி- அதுபோ
ரமேல் சொல்லப்பட்டதனில்-உறிக்கொண்டவெண்ணெய்பாலொ
ளித்துண்ணுமம்மான்பின் நெறிக்கொண்ட நெஞ்சுளுப்- உறியிலே
வைத்திருக்கும்வெண்ணெய்பாலிலொளித்தமுதுசெய்தவாமியாலே
ஸ்ரீகீதையின் பிற்கூற்றில் சொல்லப்படும் நெறியான (சாமகலோ
கத்தில்சொல்லியிருக்கும் அர்த்தத்தைக்கிரஹிக்கப்பட்ட நெஞ்ச
புடையனுய்- பிறவித்துயர்கடிந்து- பிறவியென்கிற தளர்ச்சிபோக
ப்பட்டு - எய்தினென்- அடைந்தேன் - சாமகலோகத்தில்-மாமேகம்

சரணமவ்ரஜ என்று என்னையொருவனையே சரணமாக வடையென்ற ருளிச்செய்தபடியால் அவனை, நிறுக்கொண்டு-நிறு-சாதனம்-அவனை ச்சாதனமாகக்கொண்டு குறிகொள் ஞானங்களா லெனையூழிசெய் தவரும் இப்பிறப்பே நிலநாளிலெய்தினன்-என்னை நின்னை மார்க்கமென்றபடி.

கடிவார்தண்ணந்துழாய்க்கண்ணன்விண்ணவர்பெருமான் ... ...*
படிவானமிறந்தபரமன்பவித்திரன்சீர்..... ... .*
செடியார்நோய்கள்கெடப்படிந்துகுடைந்தாடி..... ... ...*
அடியேன்வாய்மடுத்துப்பருகிக்களித்தேனே..... ... ...(கூ)

படிந்து-இட்டி-குடைந்து-கலியாணகுணங்களெல்லாவற்றையும் ஆராய்ந்து-ஆடி-அவகாயித்து-வாய்மடுத்துப்பருகி-பெருவிடா யோடே அனுபவித்து-களித்தேன்-படி-ஒப்பு-இறந்தஇல்லாத.

களிப்புங்கவர்வுமற்றப்பிறப்புப்பிணிமூப்பிறப்பற்... .. ..*
தெளிக்கொண்டசோதியுமாயுடன்கூடுவதென்றுகொலோ ... ...*
தளிக்கின்றவானித்நிலன்சுடராழிசங்கேந்தி..... .....*
அளிக்கின்றமாயப்பிரானடியார்கள்குழாங்களையே ... ... (கூ)

களிப்பு-தாரபுத்திராதிகளால்வரும் சந்தோஷம்-கவர்வு-துக்கம்-அற்று-இதுபோய்-ஒளிக்கொண்டசோதியுமாய்-ஆயிரத்தெட்டுமாற்று அபரஞ்சியான சரீரத்துக்குக்கோடிசூரியப்பிரகாசமுடையதிருமேனியைப்பெற்று-உடன்கூடுவது-என்றுகொலோ-நித்தியசூரிகள்கூட்டத்தில்பிரவேசிப்பதென்றே.

குழாங்கொள்போரக்கன்குலம்வீயமுனிந்தவனைக்..... .....*
குழாங்கொடென்குருகூர்ச்சடகோபன்றெரிந்துரைத்த ....*
குழாங்கொளாயிரத்துளிவைபத்துமுடன்பாடிக்... ... .*
குழாங்களாயடியீருடன்கூடிநின்றுமிமினே.. ....(கூ)

உடன்பாடி-அர்த்தகியானத்தோடேபாடி-குழாங்களாய்-பாகவதாளுடனே-அடியீர்-பகவத்தாலே-உடன்-எகண்டராய்-கூடி நின்று-ஆயிமினே-நிருத்தஞ்செய்யுங்கோள்.

சு-ம் திருவாய்மொழி.

கேழ்த்திருவாய்மொழியில் (பரமன்பவித்திரன்சீர்பருகிக்களித்தேனே) என்று ஸந்தோஷித்தாய், அந்தப் பகவத்குணங்

விருத்திசெய்வித்து ரஸமாக்கித் தருமவர்களிக்கில்லாமையால் நித்ய சூரிகள்திரளில் போயனுபவிக்க யத்தனித்து அதுநினைத்தபோ தேபெறுமையாலே மிகவுந்தளர்ந்து தம்முடைய தசையைவ்விஷ யாந்தரப்ராவண்யத்தாலே) ஸ்ரீமவஷ்ணவர்கள் எம்பெருமானுக் கறிவிக்கின்றபடியை (அன்னியாபதேசத்தாலே) தாய்ச்சொல்லாலேபேசுகிறார்-அஞ்சிறை யமடநாராயில்-தூதுவிடக்கூடுமாளுர்-ஈராயுத்திரையுகளில் கண்ணு வ்ஸண்டபதார்த்தங்களடையத்தம்மைப்போல் பகவானைப்பிரிந்திருந்து ஞேலே தோவுபடின்றனவாகக்கொண்டு அவற்றுக்கு நோவுபடக்கூ டாளுர்-அவ்வளவன்றிக்கே ஆற்றுமைகையைபுரண்டு தம்தசையை த்தாம் வாய்விட்டுப் பேசமாட்டாமே பார்சுவஸ்தரறிவிக்கவேண் டும்படியாய் ஸ்ரீதேவிகளுனிலும் ஒருநிபதியன்றிக்கே நோ வுபடநாயகிதசையை யறிந்திருக்தாயார், ராமகிருஷ்ணுதியவதா ரங்களைப்பண்ணி ஆர்த்தாளுர் ஆர்த்தியெல்லாம் போக்கும் ஸ்வ பாவாளுதீர் உம்மையாசைப் பட்டவிவள் நோவுபடப்பார்த்திருப் பதேயென்று அவன்திருவடி களிலேபொகட்டு இவளிடையாட்டத் தில் நீர்செப்பநினைத்திருக்கிற தென்னென்று தம்முடைய தசை யை யறிவிக்கிறுள் - கானை இழந்தவனுக்கும் பொன்னை இழந்த வனுக்கும் இராஜ்யத்தை இழந்தவனுக்கும் கிலேசம் வெவ்வேறுப ட்டிருக்கும் - திருவிக்கிரமனுடைய திருவடிகளை யனுபவிக்க ஆசைப்பட்டித்தடையாமையாலே வந்தவாற்றுமை அஞ்சிறையம டநாராயில்- இதில் ஸ்ரீகீதையில்-ஜ்ஞானிஞ்வாத்மைவமேமதம்॥ இயானிகளை ஏன்ஞானமாவாய் நினைத்திருக்குமது என்மதமென்றும்-பாரதத்தில்- மம ப்ராணாஹிபாண்டவா॥ பாண்டவர்கள் என்னுடைய ப்ராணனன் றேவென்றுஞ்சொன்னபடியே அவனுக்கு உயிர்போலெண்ணியிரு க்கும் நித்யசூரிகளை யாசைப்பட்டித்தடையாமையால்வந்தவாற்று மையாலை இதமிஞ்சிபிருக்கும்- நித்யசூரிகளோடு கூடவா சைப்பட்டால் அவர்களைச்சொல்லிக்கூப்பிடாதே இவனைக்கூப்பிடு வானெனில்- காட்டிற்றீதிருவடிகளோப் பறியுண்டவன் ராஜனிடத்தி ல் சொல்லிமுறையிடுமாப்போல் அவனைக்கூப்பிடுகிறுள் - விஷந் தின்டினவனுக்கு வெம்புருசிக்கும்-சர்க்கரைசக்கும்-அதுபரிஹா ரியாலேபோகப்பெற்றவனுக்கு வெம்புசக்கும்-சர்க்கரைருசிக்கும்- அதுபோல்விஸ்ரம்பர்ப்பத்தாலேகடியுண்டவர்களுக்குப்பகவத்வி ஷயக்கைத்தலைம்சாரம் ருசித்திருக்கிறது-(மருத்தவனுய்நின்றமா மணிவண்ணன்) குருவாய்வந்து அநிஷ்டாகுஷமாகிற ஔஷதத்தைத் தொடித்து அவ்வௌஷதத்துக்கு முறிவாகிய இதாதேனதாபஜஸ்வ-

இதாமந்திரம்-இதாசாதனம்-இதாப்பிரயோஜனங்களாகிற அபத்தி லங்களைவிலக்கினவர்களுக்குவிஷ்ணுதீரும்-பின்பு பகவத்விஷயம்ருசி க்கும்- அதில் உட்புகாநின்றவர்களுக்குப்பாகவதவிஷயம்ருசிக்கும்.

க-பாகரம்.

வஞ்சிவிருத்தம்-பண்-நாட்டம்-தாளம்எடிமாத்து.

இதை இப்போது யமுனைத்துறையாண்டியும்- ஐயால் ராகத்திலும் நிரிபுடைதாளத்தில் பாடிக்கொண்டு வருகிறார்கள்.

ஆழ்வான் பிரதிக்ஞை பண்ணினபடியே தாணி லவதரித்த அழகிய சிங்களாச் சொல்லிக்கூப்பிடுகிறாள்.

ஆடியாடியகன்கைந்திசை.....*
பாடிப்பாடிக்கண்ணீர்மல்கியெங்கும்.....*
நாடிநாடிநரசிங்காவென்று.....*
வாடிவாடுமிவ்வாணுதலே.....*

ஆடியாடி- ஸ்திதி-கமன-சயநாதிகளிலே ஒருநியதியின்றிக்கே (அரதி) யாலேபடுகிறபாடுநிருத்தாயாருக்கு ஆகர்ஷகமாயிராநின்ற து- ஸ்திதி இருத்தல்- கமனம்- நடக்கிறது- ஆடி- முதல்ஆடியென் றதற்கவ்வருக்கியொருநில இரண்டாம்ஆடி- முதலில்ல சஞ்சாரம் அநாதம்படி யிருக்கச்செய்தே ஆற்றுமை மிகோபிக்க சஞ்சரியா நிற்கும்-குணதீக்ஷ விஷயமாகையாலே முடிந்தபிழைக்கவு மொ ட்டாதன்றே - முதலாடியிலும் இரண்டாதாடியில் துக்கத்தின்மி குதிகொண்டறியு மித்தனை- அகங்கனைத்து- அகம்- மனசானது- க னைந்து- உருகி- இசை-ஸ்வரத்தோடே- உருகினமனசானது இசை யாய்ப்பிரவஹித்தது- பாடிப்பாடி- ஆற்றுமையாலேகூப்பிட்ட கூ ப்பீடுபாட்டாய்முடிந்தது- முதல்கூப்பீட்டுக்கு இரண்டாங்கூப்பீ டுதளர்ந்திருக்கும்- கண்ணீர்மல்கி-உருகினமனசானது- இசைபாய் ப்பிரவஹித்து மிக்கது கண்ணீராய் பிரவஹிக்கிறபடி- மல்கி- ஊ ற்றுச்சாக்குமாப்போலே விஸ்தாரமாய்- எங்கும்நாடிநாடி- தேடி த்தேடி - திக்குகளெல்லாந்தேடி - நரசிங்காவென்று - வாடிவாடும்- தெளிவுடைய பிரஹலாதனுக்குத் தோற்றினவன் கலங்கின அப லைக்குத் தோற்றானேவென்று வாடும் - முதல்வாட்டந் தணிந்தெ ன்னும்படி. இரண்டாம்வாட்டம்-இவ்வாணுதலே - ஒளியுடன் கூடின தெற்றியையுடைய இவள். வாள்-காந்தி-ஒளி.

வாணுதலிம்மடவாலும்மைக்.....
வாணுமாலைசபுணர்ந்தின்றுள்விறல்.....

வாணுதலிரந்தோடிணைத்தீரும்மைக்.....*
காணநீரிரக்கமிலீரோ.....(உ)

வாணுதல்-காந்தியையுடைதானமுகத்தையுடைய-இம்மடவரல்- பிரிந்துகலக்கப்பெறாதஸௌகுமார்யத்தையுடையவள்-உம்மைக்கா மாசையுள்-உம்மைக்காணவேணுமென்கிறவாசையில்- நைகின்றுள்- விறல்வாணுதிரந்தோள்துணித்தீர்-உம்மைக்காண- உம்மோடப ணையவாசைப்பட்டாளோ-காட்சியிலேயும்அருமைப்படுத்தவீரோ- நீரிரக்கமிலீரோ-நீரிரக்கத்தையுடையீராகிலீர்-இவள்தனவு,பேற்று க்குஉபாயமன்றுஅவனிரக்கம்,பேற்றுக்குசாதனமென்றுதிருத்தா பார்நினைத்திருக்கிறாள்-இதற்குப்பிரமாணம்கடவல்லிஉபநிஷத்தில்- நாயமா த்மாப்ரவசனேனலப்யோ॥ந மேதயா॥நபஹுனாச்ருதேன-யாவனை ரு ஏர்மேவசுவரன் சேதனனுடைய பிரவசனம்- மேதை-வெகுவேத கேள்விகளிலடையப்பட்டவனன்று-யமே வைஷவ்ருணுதே தேனலப்யஃ- எவனை ஏர்மேவசுவரன் வரிக்கிறானோ அவனுக்கே தான்அடையப்படுகி றான்-தஸ்யைஷஆத்மாவிவ்ருணுதேதனூம்ஸ்வாம்॥அவனுக்கு-ஏஷ-அந் த-ஆத்மா-பரமாத்மா-ஸ்வம்-தன்னதான-தனூ-திருமேனியை- விவ்ருணுதே-விவரணம் பண்ணுகிறானென்று சொல்லியிருக்கின்றதை (நூத)ப்படி வியாக்கியானத்தில் நம்பிள்ளை உதாஹரித்திருக்கிறார்.

இரக்கமனத்தோடெரியிணை.....*
ஈரக்குமழகுமொக்குமிவள்.....*
இரக்கமெழீரிதற்கென்செய்கேன்.....*
ஈரக்கனிலங்கைசெற்றீர்க்கே.....(ஊ)

இரக்கம்-திருவுள்ளம்- எழீர்-பிரகாசம்பண்ணுதேயிருக்கிறீர்-நீரு ம் இவளைப்போலே உருகிவேணுமென்று உம்மைவலைக்கிறேமோ- தொந்தார் பக்கல்பண்ணும் திருவுள்ளமும் பண்ணுகிறிலீர்- நீரிரங்கா விடில் உம்மைப்போலே இருப்பதொரு நெஞ்சைக் கொடுக்கவுமி ல்லை- என்செய்கேன்- உம்முடைய இரக்கமொழிய இதரஉபாயக்க லாடையத்தக்கதன்றே-உம்முடையமனமிரங்கப்பண்ணவோ-இவ ளைமனமிரங்காமல்பண்ணவோ- அரக்கனிலங்கை செற்றீர்க்கே- இவ ளிரக்கும்படி ஒருசெயல்செய்தலைக்கலாமோ- பிராட்டிக் திருவின்வன்றமக்கொக்காதேனென்று இரக்கமென்றதோடு எரியவே

யாக்குமெழுகுமொக்குமிவள் இாக்கமெழீரிதற்கென் செய்கேன்
என்றநுவயம்- எரி- அக்கினியை- அனை-கட்டினை-அாக்கு.

இலங்கைசெற்றவனேயென்னும்மின்னும்.....*
வலந்கொள்புள்ளுயர்த்தாயென்னுமுள்ளம்.....*
மலங்கவெவ்வுயிர்க்குங்கண்ணீர்மிகத்.....*
கலங்கிக்கைதொழுநின்றிவளே.....(உ)

உள்ளம்-மனது-மலங்க- கலங்க- வெவ்வுயிர்க்கும்- வேர்பறியும் படிநெடுமூச்செறியாநீற்கும்.

இவளாப்பகல்வாய்வெரீத்தன.....*
குவளைபொண்கண்ணீர்கொண்டாள்கண்டு.....*
திவளுந்தண்ணந்துழாய்கொடுசொனத்.....*
தவளவண்ணர்தகவுகள்ள.....(ஙி)

தகவுடையவனேயென்னும்மின்னும்.....*
மிகவிருப்பும்மிரோவென்னுமென.....*
தகவுயிர்க்குமுதேயென்னுமுள்ளம்.....*
உகவுருகிநின்றுள்ளுளே.....(சு)

தகவு-திருபை-அருள்- தகவுடையவனே யென்னும்-பேரருளாள னே யென்னும்- எனதகவுயிர்க்குமுதே யென்னும்- எனது- என்னு டைய- அகவுயிர்க்கு- சரீரத்திலிருக்கு மாத்மாவுக்கு- அமுதே என் னும் அன்றிக்கே- என்னுயிர்க்கு - எச்சுக்மாவுக்கு-தக - உசிதமா ன- அமுதே- அமிர்தமே- என்னும்- உள்ளம்- மனசு - உக-மக்கும் படி- உள்ளுளே- (ரூபகரித்திராத ஆத்மவஸ்துரூபகரித்து) -உருகி தண்ணீராய்க் கரைந்தநின்று உள்ளமுக வுருகிநின்று தகவுடையவ னே என்னும் பின்னுமிக விருப்பும் பிரானென்னும் - எனதகவு யிர்க்குமுதே என்னும் - இதிவள் பேச்சுக்கொண்டறிந்த வம்சம்- உள்ளேயிருக்கிறது வாசாமகோசர மென்றபடி.

உள்ளுளாவியுலர்ந்துலர்ந்தென.....*
வள்ளலேகண்ணனேயென்னும்மின்னும்.....*
வெள்ளநீர்க்கிடந்தாயென்னுமென.....*
கள்விதான்பட்டவஞ்சனையே.....(எ)

உள்ளுளாவி - ஆத்மாவான மனசுக்குத் தாரகமான ஆத்மா

றுசொல்லுகிறவிதுவும் பொய்யாயிற்றென்கிறாள்- என்-என்னுடை ய- சுவி-தன்மேலுயிர்காத்தனைத்தோற்றுதபடியொளித்துக்கப்பட த்தேமேடியிருக்கிறமகள்- தான்பட்ட- தான்படாநிற்கிற- வஞ்சனை யே- நாடகஞ்செய்யப்பட்ட வஞ்சனையே.

வஞ்சனைனென்னுங்கைதொழுத்தன.....*
நெஞ்சமும்வலதெடிதுயிர்க்கும்மிறற்.....*
வஞ்சனைவஞ்சனைசெட்டிருப்மைத்.....*
தஞ்சமென்றிவள்பட்டனமே.....(அ)

வஞ்சனையென்னும் - நான் அல்லேனென் றகன்றாலுந்தவிர வொண்ணாதபடி வஞ்சித்தன்திருவடிகளிலே சேர்த்துக் கொண்ட உபகாரமேன என்றுநின்றாள் - கைதொழும் - வஞ்சித்தடிமைகொ ண்டஉபகாரத்தை நினைத்துத்தொழும்- தனனெஞ்சம் வேவ- தன்ம னமேவ- நெடிதுயிர்க்கும்- பெருமூச்சு விடுவவ்-விறல்வஞ்சனை வ ஞ்சனைசெட்டீர்- உம்மைத்தஞ்சமென்றிவள்பட்டனமே- இவள்பட் டபாடு எத்தனையுண்டி.

பட்டபோதெழுபோதறியாள்விளா.....*
மட்டலர்தண்டுழாயென்னுஞ்சுடர்.....*
வட்டவாய்நுதிநேமியீரைந்தும்.....*
திட்டமென்கொலித்தீவலைக்கே.....(க)

பட்டபோது - அல்தமித்தபொழுதும்- எழுபோது- உதித் தபொழுதும்- அறியாள்- தமது- உம்முடைய-இட்டம்- இஷ்டம்- அதாவது- சங்கல்பம்- நினவு- என்கொல்- எங்ஙனேயோ - இவ்வி வலைக்கே- இந்தப்பாலியமுடையவளுக்கு.

எழுபேதையரோப்பதற்றன.....*
கேழிலொண்கண்ணீர்கொண்டாள்கிளர்.....*
வாழ்வுவேவவிலக்கைசெற்றீரிவள்.....*
மாழைநோக்கிகொன்றும்வாட்டேன்மினே.....(ஙி)

தன-தன்-சேழில்-ஒப்பிலவாத- ஒண்-சுந்தரமான-கண்ணை-கண் வில்லே- நீர்- கண்ணீரை- கொண்டாள்-மானை-இளமைதங்கி- நோ கொல்றும்- கடாக்ஷமொன்றும்- வாட்டேன்மினே- ஹாவியன்றி லே காரியம்பார்க்க வேணும்.

மிடமில்புகழ்வாமனனேயிடை.....
வஞ்சட்டோபன்செல்வனமே.....

பாட்டோராயிரத்திப்பத்தாலடி..... .....*
சூட்டலாகுமந்தாமமீம..... (ரக)

அந்தாமமே- அழகியதிருமாலையை- அடி- ஸ்ரீபாதத்திலே- சூட்டலாகும்- ஸமர்ப்பிக்கிறவர்களுடைய- சித்தத்தை.

ரு-ம் திருவாய்மொழி.

கீழ், ஆடியாடியில் ஆழ்வாருடைய பக்தி என்கிற பயிர்வாடி வதாகச் சொல்லிற்று - இத்திருவாய்மொழியில் இவர்பிரார்த்தித்தபடியே நித்தியசூரிகளுடன்வந்து சேவைசாதித்தபடியாலே வாடினபயிருக்கொருபாட்டம் மழைபெய் தாப்போல்அருள்வருஷிம்பருஷித்தபடி சொல்லிற்று - வைகுந்தாமணிவண்ணனில் வருஷித்த வருஷம் வெள்ளமெடுத்தபடி சொல்லிற்று- கேசவன்றமரில் அந்தவெள்ளம் வந்தநிலமே பயிர்பலிதமாகித்தன்னுடனேதன்பந்துக்களுக்கும் ஜீவனமுண்டானபடி சொல்லிற்று- அணைவதரவணையில் விளைந்து சேர்கட்டினதானியத்தை உலகத்துக்கெல்லாம்வழங்கினபடி சொல்லிற்று- எம்மாவீட்டில் வழங்கின தானியத்தை உழிப்பாக்கி தளிசைபண்ணினபடி சொல்லிற்று- ஐவரொளியிளமையில் தளிசைப்பண்ணினதக்காரவடிசலைப் புஜிக்கலாருங்கோளென்றுபதேசம்பண்ணினபடிசொல்லிற்று-முழுச்சோற்றில் உண்கேளித்தபடியைச் சொல்லிற்று.

சுபாசுரம்.

கவிவிருத்தம்-பண்-சீகாமரம்-தாளம்-நடையொத்து

இதைஇப்போது பைவிராகத்திலும் ஆதிதாளத்திலும்பாடிகொண்டு வருகிறார்கள்.

அந்தாமத்தன்புசெய்தென்னுடிசேரம்மானுக்..... .....*
கந்தாமஞ்சூழ்முடிசங்காழிநூலாரமுள..... .....*
செந்தாமரைதடங்கண்செங்கனிவாய்செங்கமலஞ் ....*
செந்தாமணாயடிகள்செம்பொன்திருவுடம்பே..... .....*

அடியார்குழாங்களை யுடன்கூடுவ தென்றுகொலோவென்று நியமனம்பண்ணப்பட்டபடியே நித்தியசூரிகளோடுவந்து ஸ்ரீகஜேந்திராழ்வானுக்குதவினாப்போலேஉதவினபடியைச்சொல்லுகிறார்- அந்தாமத்தன்புசெய்து-அம்- சுத்தாமாயானந்தமயமான-தாமத்து- பரமபதத்திலிருக்கிறநித்தியசூரிகளிடத்திலுண்டான-அன்புசெய்து-கிரமவறத்தைப்பண்ணி- என்னுயிர்- என்னுத்மாவிலே- சேர்- சேர்ந்த- அம்மானுக்கு- ஸ்வாமிக்கு- என்னுயிர் என்கிற தொனியானது அவன்மேலுயிர், தாமிருப்பத்தமை தோற்றுகிறது- இருப்கிறது (நைச்சியஞ்செய்தகலுகை)-இவுர்பூர்வ விருத்தத்தை நினைத்து இருபாற்கடல்- அவன் (நீர்புனாவண்ண) நுகையால்நீரானது பள்ளமுள்ளவிடத்தில் மேதக்குமாப்போல் நைச்சியமுள்ளவிடத்தில் மேல் விழாநின்றான்- அந்தாமவாள்முடி சங்காழிநூலாரமுள-இவராசைப்பட்டபடியே நித்தியசூரிகளோடே வந்து கலந்தானென்று ஆளவந்தாருளிச்செய்தாராகத் திருமாலையாண்டான் பணிக்கும்படி- ஸ்ரீஸ்ரீ அவர்களை ஆழிநூல் ஆரம்பித்து சொல்லுவ தென்னெனில்- அவர்கள் சின்மயராயிருக்கச்செய்தே பாரதந்திரியம் சித்திக்கைக்காகத்தங்களை ஆயுதங்களாகவும்ஆபரணங்களாகவும் அமைத்து வைத்திறவித்தான்- அங்ஙனன்றிக்கே எம்பெருமானு ளருளிச்செய்யும்படி கற்பகத்தருவாழுனல் அதிபூவுந்தளிரும்வாடுமாப்போல்இவரோடு சம்சிலேஷிப்பதற்கு மூன்பு ஈசுவரசம்ஸ்டோக்க இவையும்வாடிஇவரோடுகலந்தபின்பு பிரகாசததோடுகூடிவிக்தைப்பெற்றபடி சொல்லுகிறதென்று- உள- உண்டாயிருந்தபடி-சத்தைப்பெற்றபடி-அந்தாமவாழ்முடி-அழகியமாலையானது முடிசூடிவாழத்தொடங்கிற்று- அன்றிமே வாள்முடி என்றுமே, வாள் வைறு ஒளியாய் மிக்க தேஜோரூபமான முடியென்றுமாம்- தாமம் தேஜஸாகவுமாம்- தேஜோரூபமான ஸ்ரீபாஞ்சஜன்னிய முதலானவை என்றுமாம்- நூல்- திருயக்ஞோபவீதம்- ஆரம்-திருவாரம்-இவை நித்தியசூரிகளுக்கு உபலக்ஷணம்-செந்தாமரைத்தடங்கண்- செங்கனிவாய்ச்செங்கமலம்- சாடசதங்கள் சொலலுகிறதிருவதரமிருக்கிறபடி- சாடி- சிலேஷியானபேச்சு-சிவந்துகனிந்த திருவதரமாலை நிவந்தகமலம்போலேயிராநின்றது - செந்தாமரையடிகள் - தோக்குக்கும்ஸ்மிதத்துக்கும் தோற்றுவிழுந்திருவடிகள்-செம்பொன்திருவுடம்பே- சுருதி-சாந்தோக்யத்தில்-ஹிரண்மயவபுஃ ஸ்வர்ணமயமான திருமேனியையுடையவனென்று சொல்லுகையால் செம்பொன் திருவுடம்பென்கிறார்-இந்த உபயவேதங்களிலும் ஸ்வர்ணமயமான திருமேனியையுடையவனென்று சொல்லியிருக்கையால் பிரம்மத்துக்கு ரூபமில்லை என்ற அத்வைதிகள்பக்ஷம் நிரசிக்கப்பட்டது-இந்த அவயவங்களும்ஆயுதங்களும்ஆபரணங்களும்இவரோடு சம்சிலேஷித்து பரிபூர்ணானந்தத்தையடைந்து[illegible]

தவனைன்று சொன்னதுகன்மமடியாகவரும் விகாதங்களிலே என்
றுசொன்ன வித்தனைபோக்கிப் பிரிதிய துசயத்தாலேகுணங்களாலீவ
ரும்விரோதங்களிலேயென்றதன்று.

திருவுடம்புவான்சுடர்செந்தாமரைகண்கைகமலத் .....*
திருவிடமேமார்பமணிடமேகொப்பூழ்ந்..... - .....*
ஒருவிடமுமெத்தைபெருமாற்காரமேனியா..... ... *
ஒருவிடமொன்றின்றியென்னுள்கலந்தானுக்கே..... (உ)

திருவுடம்புவான்சுடர் -சுருதி - தஸ்ை ஷபதாவிவ்ருணுதேதனூம்
ஸ்வாமென்று தன்னால் வரிக்கப்பட்டவனுக்குத் தன்திருமேனியை
க்கொடுக்கிறுசொன்னும் - சுருதி - யஸ்ய துதாபலதாஎன்று தன்னை
டைந்தவர்களுக்குத் தன்னைக் கொடுக்கிறுவென்னும் தன்னையறுப
விக்கக் கியானபலத்தைக் கொடுக்கிறுவென்றுஞ் சொல்லுகையா
ல் தன்னை, யடியார்களுக்குக் கொடுக்குந் திருமேனி காந்திலையச்
சொல்லுகிறது - செந்தாமரைக்கண் கைகமலம் - பிளவுபடாதகண்-
ணுக்கந்தமானவாயாகிய திற்நின்பத்தையனுபவிக்கிறவர்கள்கூடி
காலம்பாகமும் மீதாஷி மும் மேல்நாகமுமுண்டென்று தெரிந்தி
ருக்கமறுபடியுமறுப்பு மதைவிரும்பக்கண்டிருக்கிறும்- அத்
குற்றங்களில்லாத பேரின்பத்தை யனுபவிக்கிறவர்கள் (தாள்க
ண்டார் தாளைகண்டார் தடக்கைகண்டாருமஃதே) என்று சத்தி
சவர்த்திக் நிருமகனுடைய சௌந்தரியங்களி லீடுபட்டவர்களு
டையதசை இப்படையாயிருக்குமாப்போல் இவரும் (வேம்புரழலில்
செல்லவிட்டாலீதை, நனகீசயற்றுத்தீரும்படிபண்ணவல்ல) சௌ
ந்தரியத்திலீடுபட்டுப்பலகாலனுபவிக்கிறார் - திருவிடமேமார்பம்-
நீருண்ட காளமேகத்தில் மின்னல்கொடி படர்த்தாப்போல் பிரா
ட்டி பிரகாசிக்கையால் திருவுக்கிருப்பிடம் மார்பமாயிருக்கிறது-அ
யனிடமேகொப்பூழ்-சௌந்தரியப்பிரவாஹத்தில் ஒருசுழிசுழித்தா
ப்போலிருக்குத்திருவுந்தியில்பிறந்தஒருகமலத்தில் நாலுதமலர்பூ
த்தாப்போலிருக்கையால் அயனுக்கிருப்பிடம்கொப்பூழ் - ஒருவிட
மு மெத்தைபெருமாற்கார்ன் ஓரிடமென்றுதே ஒருவிடமென்
கிறது ஒருவுதல்நீங்குதலாய் நீங்கினவிடமென்றபடி - தாமசதேவ
தைஇருப்பிடமானையாலே நீங்கினவிடமென்று அநுசரவார்த்தை-
ஒருவிடமொன்றின்றி என்னுள் கலந்தானுக்கே - என்றேறிட்டவத்
தலைக்கிறவிடத்தில் நீங்குமிடமுன்றின்றிக்கேவந்துகலந்தான்-ஒ-
என்று பிராட்டிக்கும் பிரம்மருத்திராதிகளுக்குந் திருமேனியில்
இடங்கொடுப்பதேயென்று ஆச்சரியப்படுகிறார்.

என்னுள்கலந்தவன்செங்கனிவாய்செங்கமலம்..... ... .*
மின்னுசுடர்மலிக்குக்கண்பாதங்கைகமலம்.....*
மன்னுமுழுவேழுலகும்வயிற்றினுள ....*
தன்னுள்கலவாதபெருளுந்தானிலையே ... .(க)

எப்பொருளுந்தானுய்மாததக்குன்றமொகீகும்..... .....*
அப்பொழுதைத்தாமரைப்பூக்கண்பாதங்கைகமலம்..... ... ...*
எப்பொழுதுநாடிங்களாண்டுழியுழிதொறும் ... .*
அப்பொழுதைக்கப்பொழுதென்னுராவமுதமே.....(ச)

ஆராவமுதமாயல்லாவியுள்கலந்த... .....*
காராக்கருமுகில்போலென்னம்மான்கண்ணனுக்கு..... .....*
நேராவாய்செம்பவளங்கண்பாதங்கைகமலம்..... .. .. *
போராநீண்முடிநான்முகன்னுமிமையபலவே.....(ஞ)

பலபலவேயாபரணம்பேரும்பலபலவே.. ....*
பலபலவேசோதிவடிவுபண்பெண்ணில்..... .....*
பலபலகண்டுண்டுகேட்டுற்றுமோந்தின்பம்..... ....*
பலபலவேஞானமும்பாம்பணைமேலார்க்கேயோ.....(கூ)

பலபலவேசோதிவடிவு - திருநாமத்தால்காணும் வடிவுகளும்
பலபல-பண்பு-பிரகாரம்-எண்ணில்- நினைத்தால்-பலபல- அனேக
ங்களுண்டு-ஞானம்- யோனமானது- கண்டு- திருஷ்டிப்பிரியமாயி
ருக்குமவையும்-உண்டு- பஜிக்குமவையும்-கேட்டு- சிரவணேந்திரிய
விஷயமாயிருக்குமவையும்- உற்று-ஸ்பரிசவிஷயமா யிருக்குமவை
யும்- மோந்து - ஆக்ராணேந்திரியவிஷயமாயிருக்கு மின்பும் அ
னேகங்களாயிருக்கும் - யோனமும்பலபல- விஷயங்கள்தோறும்
பேதித்திருக்குங் யோனமும் பலபலவாயிருக்கும்.

பாம்பணைமேற்பாற்கடலுட்பள்ளியமர்ந்ததுவும்... ... ...*
காம்பினைதோட்பின்னைக்காயேறுடனேழ்செற்றதுவும்.. ... ...*
தேம்பணையசோலைமாமாமேமெழுப்பதுவும்... ... ...*
பூம்பணையதண்டுழாய்ப்பொன்முடியம்போலே ... ...(எ)

காம்பினைதோட்பின்னைக்காய்-சுற்றுடைமைக்கும்செவ்வைக்கு
ம்முங்கில்போலேஇருந்துள்ள தோள்களையுடைய நப்பின்னைபிரா
ட்டிப்பொருட்டு - ஏறுடனேழ்செற்றதுவும்-தேம்-தேனையுடைய-
பணைய- பணைத்துப் பத்திரசாகைவிஸ்தாரமான-பூம்பணைய-பூவை-
புடைத்தாய்த்தொடையுண்டவென்னுதல்- பேய்முலையுண்டு
வேகிக்கும்ருஷிபம்-காம்பனதோட் பின்னை என்னும் பாட

பொன்முடியெம்போரேற்றையெம்மானை நாற்றடந்தோள்.....*
தன்முடிவொன்றில்லாததண்டமிழாய்மாலுடனை.....*
என்முடிவுகாணுமேதையென்னுட்கலந்தானைச்.....*
சொன்முடிவுகாணைஞான்சொல்லுவதென்சொல்லீதோ.....(எ)

தன் - தன்னை ஸ்துதிக்கைக்கு - முடிவு எல்லை- ஒன்றில்லாத- அன்றி - தன்முடிவு - தனக்குவினைகம்- ஒன்றில்லாத- எருகளினில்- ஸ்ரீமந்நாராயணஸ்தே॥நபரஹ்மனேசங்கரே॥ பிரம்மருத்திராதிகளிறந்த நாராயணனெருவனே முடிவில்லிருக்கின்ற னென்றும்- பரிபவி தஸ்ய-லோகநாதன்-பரமேஸ்வரா॥ தனக்குத்தானே நாயகன்- சாஸ்வதம்॥ சாகவிதன்-சிவம்-மங்களத்தையுடையவன்-அச்யுதம்- நாசமில்லாதவன்- என்றுசொல்லியிருக்கையால் தனக்குவினைசமிலாதவனென்கிறது.

சொல்லீரொண்ணம்மானென்றுயிராவிதனை.....*
எல்லையிலீரொன்கருமாணிக்கச்சுடரை.....*
நல்லவருந்தம்பெறற்கரியவீடுமாய்.....*
அல்லிமலர்விளாயொத்தாணல்லன்பெண்ணலனே.....(கூ)

பெறற்கரிய- பெறுதற்கரிய அதாவது ஒருவராலும் ஸ்வயத்தனத்தால் அடையவொண்ணாத-வீடுமாய்- மோக்ஷபுருஷார்த்தமுமாய்- அன்றிக்கே- பிறர்க்கரிய வீடுமாய்என்றும் பாடமுண்டாகையால்(பத்துடையடிய வர்க்கெளியவன் பிறர்க்குக்கரிய வித்தகன்) என்றதில் (பிறர்களாகிறார்- ஈசுவரனையுபாய மாகப்பற்றுமவர்கள் முபற்றியால்அடைய விச்சிக்கிறவர்கள் பிறர்களென்று வியாக்கியானஞ்செய்திருக்கையால்) இக்குபிறர்க்கரிய வீடுமாய்-பிறர்- அன்னியர்க்கு- அரிய- ஸ்வயத்தனதீதாலடையப்படாதவனாய்-என்றுபிரதிவியாக்கியானத்தில் அருளிச்செய்திருக்கிறார் - இவ்விரண்டுவகையாலும் ஸ்வயத்தனத்தால் அடைய நிஷ்க்ருமவர்களுக்குப் பெறுதற்கரியனென்றுசொல்லியிருக்கிறது-இதற்கு-ராகம்-பக்தத்தில் சுருதியும் சொல்லியிருக்கையால் ஸ்வயத்தனத்தால் மோக்ஷமடைகிறே மென்றபின்னம்பிரதாயஸ்தர்களுக்குப்பரமபத மில்லையத்றுபபயவேதக்கவிலும் சொல்லியிருக்கிறது- அல்லிமலர் விளாயொத்தி போக்கியவதக்குத்தாமனாப்பூவில் பரிமளத்தோடொத்து- ஆணல்லன் பெண்ணல்ல - இதரபுருஷ ஜாதியனல்லன் - பெண்ணல்லென்றவோபாதி ஆணல்லென்றதையுங் கழிக்கிறது.

ஆணல்லன்பெண்ணல்லனல்லாவலியுமல்லன்.....*
காணுமாகாணலனல்லனிலேயல்லன்.....*
பேணுக்காம்பேணுமுருவாகுமல்லனுமாய்.....*
கோணைபெரிதுடைத்தம்பெம்மானைக்கூறுதமே.....(ஏ)

ஆணல்லன்-பெண்ணல்லன்-அல்லாவலியுமல்லன்- உபயோபயோகியமல்லாத நபும்ஸகத்தின்படியு மல்லன் - இதற்குச்சருதி- ஆணத்திலிரண்டாவது ஒத்தை-அஜாபிரஹ்மேன்று அகாரம் பரப்பிரம்மஸ்வரூபமென்று சொல்லியிருக்கின்றதென்று பட்டர் அருளிச்செய்தவாறே ஒருதமிழ் ஐபாதாட்சரத்தில்காணுகிற மூன்றின்படியுமல்லாதவிஸ்துவஸ்துவென்னிபமோ அதாவது ஈசுவரனே இவனியோயென்றான்-பட்டர் -பிள்ளாய்இபலதிவுக்குப்போதாதில்லையோ- ஆணல்லன்பெண்ணல்லன்-அல்லாவலியுமல்லனென்றிருந்தாகிலும் நீயப்படிசொல்லலாம்அப்படியில்லை-ஆணல்லன்பெண்ணல்லன்- அல்லாவலியுமல்லன்என்றிருக்கையால் விஜாதியவிஜாதிய நிஷேதஞ் செய்தபடியைச்சொன்னதென்றருளிச்செய்தார்-இத்தால் ஆண்-பெண்-அலி-என்கிற விம்மூன்றுக்கும் வேறுபட்டு உபயான ஹேதினின்றபடி-காணலும்-காண்கைக்கும்- ஆகாம்- அசக்கியன்-உபனல்லன்- இதரதேவதைகளை ஸ்துதிக்குமவர்களுக்குக்கிட்டான் - இல்லியல்லன்-தன்னையே தொழுமவர்களுக்கு இல்லாதவனென்று- பேணுக்காம்-ஸ்ரீபிரஹ்மாதனன்-ஸ்ரீகைஜேந்திரன்-துரோபதை-இவர்களோப்பாம்விகவஹிகளை-பேணும்-ஆதரிக்கும்-அதாவது-ஆயுதம்படாமலும்-அங்வஸ்திரத்தைப்பந்தாட்சுற்றித்திருப்பவளத்தில்வேதுயொன்டுமுதலில்கடிந்தபுண் வாயில் ஒந்தடம்கொடுத்து மனதாத்து ஸ்துதிம்ஹ மெல்லாம் ஸ்பரிஹித்தும் -வஸ்திரத்தைக்கொடுத்து மானத்தைக் காப்பாற்றினதுமன்றியில் - கோவிந்தேயதாக்ஷாயந்-க்ருஷ்ணாம்மாரவாஸினம்-ப்ரணம்ப்ரபந்நவிவமேஹ்ருதயாநாபஸர்ப்பதி॥ என்ற துரோபதையால் ம்ரோவித்தாவென்று முறையிட்டதற்குநாலைந்துஞ்செய்யப்பிபற்றிலனென்றுகடன் பட்டார் நெஞ்சம்போல்கலங்கி ஆதரிக்கும்-உருவாகும்-ஸ்ரீபிரஹ்லாதனனுக்கும் ஸ்ரீகைஜேந்திரனுக்கும் தோற்றினதுபோல் திருமேனியுடனே சேவைசாதிக்கும்- அல்லனுமாம்- நிருபாணன்தரியனினுர்களுக்குப்போல் கிட்டவரியனுயிருக்கும்-எம்பெம்மானை- என்னுடைய-கூறுதலே- சொல்லுகிறபாகு-மென்னை- பிறரு- அதாவதுரோபாஞ்சாலி-பிரிவு-மிவும்-உடைத்து- உடையிருக்கும்.

கூறுதலொன்றுராக்குடக்கூத்தவம்மானே..... *
கூறுதலேமேவிக்குருகூர்ச்சடகோபன்..... *
கூறினவத்தாதிபோராயிரத்துளிப்பத்தும்..... *
கூறுதல்வல்லாருளமோற்கூடுவர்வைகுந்தமே..... (ரடு)

ஒன்று-ஒருகுணமும்-கூறுதல்-சொல்லுகிறபோது-ஆரா-அசக்கியலுன-குடக்கூத்தவம்மானே-பிராம்மணர்களுக்குத் தனம் மிகுந்தால் பக்கியஞ்செய்வதுபோல் யாதவர்களுக்குத்தனம்மிகுந் தால்பந்தையங்கட்டிக்குடக்கூத்தாடுகை-கூறுதல்லேமேவி-ஸ்துதிக்கி றதற்கே உத்யோகித்து-குருகூர்ச்சடகோபன்-கூறின-அருளிச்செ ய்த அத்தாதி-கூறுதல்வல்லாருளமோல் கூடுவர்வைகுந்தமே.

கூ-ம் திருவாய்மொழி.

(ஆழியாழி) என்ற திருவாய்மொழியில்பிறந்த ஆர்த்திநிரவந் தரம்கிலேஷித்தபடிச்சொல்லிற்று அந்தாமசத்தன்பில்-அந்தச்சம்பி லேஷித்தாற்பிறந்த பிரீதி அவனதென்று மிடஞ்சொல்லுகிற நித்தி ருவாய்மொழியில்.

(ஊனில்வாழ்யிரில் ஆழ்வார்தாம்பகவதனுபவம்பண்ணித்தம க்கு அவன்பக்கலுண்டானபிரேமம் அவனடியாளளவுஞ் சென்றது போல்) இத்திருவாய்மொழியில் லர்மேசுவரன் ஆழ்வார்பக்கல்பண் ணின பிரேமம் ஆழ்வாருடைய லப்பத்த ஸம்பந்திகளளவும் வெ ள்ளமிடுகிறபடிசொல்லுகிறது- இப்படியிருக்கையில் இவ்வாழ்வா ர் கேத்திருவாய்மொழியில் அல்லாவியுள்கலந்தவென்று நைச்சியா நுஸந்தானம்பண்ணினபடியால் நம்மைவிடில்செய்வ தென்னென் று அநிசவ்கைபண்ணினதைக்கண்டு அவன் அநிசங்களைப்பரிஹ ரித்தபிரகாரமுஞ்சொல்லப்படுகிறது.

க-பாஸ்ரம்.

ஆசிரியத்துறை-பண்-பிழந்தக்காகம்-தாளம்-எழொத்து.

இதை இப்போது ஆனந்தபாவிராகத்திலும்-ஆதிதாளத்திலும் பாடிக்கொண்டுவருகிறார்கள்.

வைகுந்தாமணிவண்ணனேயென்பொல்லாத் திருக்குறளா யென்று வைகும்வைகலெறுமமுதாயவானேறே..... ... ...[ண்மன்னி செய்குந்தாவருந்தீமையுன்னடியார்க்குத்தீர்த்தசுரர்க்குத்தீமைகள் செய்குந்தாவுன்னைநான்பிழைத்தேன்கொல்சிக்கெனவே.....

தேற் எம்மாவீட்டில்நிஷிகரிஷித்தபேறுபெறுகைக்குத்தென்தி ருமலையை யாஸ்ரயிக்கிறதொன்று ஆளவந்தாரருளிச்செய்தாராகத்தி ருமாலையாண்டான்பணிக்கும்படி-எம்பெருமானார் அங்ஙனல்ல-இவ ர்பாட்டுதோறும் ஒல்லையொல்லை என்றும் காலக்கழிவு செய்யே லே என்றும் தவரிக்கப்புக்கவாறே (நமக்கும் அறிவித்துநாமும் இ வர்காரியஞ்செய்யக்கடவதாக அறுதியிட்டால் சரீரத்தின்கடைகியி ல்பேறுதப்பாதென்று அறுதியிட்டிருக்கலாயிருக்க) இவரிப்படி தா வரிக்கிறது இச்சரீரத்தோடே நாம்அடிமைகொள்ளவேண்டுமென் றேபோலேயிருந்தது. இனிநாம் இவர் நினைத்தபடி பர்வதாகைக்கு ஏகாந்தமான ப்ரதேசம் யாதென்று பார்த்துவரச்செய்தே தென்தி ருமலை ஏகாந்தஸ்தலமா யிருந்ததென்று ஸன்னிதிபண்ணி யருளி நாமுமக்கு முகந்தருகைக்காக வந்துநின்றோம் நீர் இங்கேவந்துநி னைத்தவைகளையெல்லாம் பரிமாறி அனுபவியுமென்றுகாட்டிக்கொ டுக்க இவரும் அதனையநுஸந்தித்துப்பகவான்பிராப்யமல்லால் அ வன் வழிக்குந்தேசமும்பிராப்யமாகக்கடவதிறே-பிராப்யம்-பே று-அத்தாலே திருமலையோடி அதைச்சார்ந்த அயல்மலையோடி புற மலையோடி திருப்பதியோடி போம்வழியோடி போகக்கடவோமெ ன்று தணியுந்தணிவோடிவாசியறப்பிராப்யத்தில் சேர்த்தனுபவி த்து ஸ்வாநுபவ பர்யவஸாயமாகவுபதேசஞ்செய்கிறார்.

க - பாசுரம்.

கலிவிருத்தம்-பண்-நாட்டம் - தாளம் - எழுத்து-

இதையிப்போது கேதாரகௌளராகத்திலும்-ஆதிதாளத்தி லும் பாடிக்கொண்டிவருகிறார்கள்.

இளமொளியிளமைகெடுவதன்முன்னம்.....*
வளமொளிமாமாயோன்மருவியகோயில்.....*
வளரிளம்பொழில்சூழ்மாலிருஞ்சோலை.....*
தளர்விலராகிற்சார்வதுசதிரே.....

இளர்-விருத்தியும்-ஒளி-காந்தியுமுடைய-இளமை-பாலியவய க - கெடுவதன்முன்னம் - போகிறதற்குமுன்பே - வளமொளி- நினைநினைவளருங்காந்தியுடைய-மாமாயோன்-அழகர்-மருவிய- ஆத ரித்து எழுந்தருளியிருக்கும்-கோயில்-கோ-ராஜனுடைய- இல்-ஸ் தானமாகிய-வளரிளம்பொழில் சூழ்மாலிருஞ்சோலை-வளர்-பார்த்து க்கொண்டே யிருக்கையில் வளரும்படியான இளமைதவ்வி யிருக்கு ம்-பொழில் - மரங்களாலே சூழப்பட்டிருக்கும் - மாலிருஞ்

சோலை-தளர்விலராகில்-தளர்வாவதுகுறைவு - இதரப்பிரயோஜனம் முதலியகுறைவுகளே மனதில்நினையாதவர்களுண்டாகில்- சார்வதுசதிரே-சார்வது-ஆஸ்ரயிக்கிறதே-சதிர் - சாதுரியம் - பிரதிபதவியாக்கியானத்தில் தளர்விலராகிச்சார்வதுசதிர் - என்றுநிர்வஹித்திருக்கிறார்.

சதிரிளமடவார்தாழ்சிலையமதியா.....*
சதிர்குலச்சக்கத்தழகர்கோயில்.....*
மதிதவழ்மாடுயர்மாலிருஞ்சோலைப்.....*
பதியதுவே நமதெழுவதுபயனே.....உ)

சதிரிளமடவார் - (தங்கள்சரீரத்திலுண்டான தூர்க்கந்தங்களே வாக்சாதுரியத்தாலே மறைத்து வலியிலகப்படுத்திக்கொள்ளுஞ்சாதுரியமுடைய-இளமடவார்-தாழ்சிலை-நீசகிருத்தியங்களே-மதியாது-அதையொருபிரயோசனமாய்நினையாமல்-மதி-சந்திரன் - தவழ்-(திருமலேஉன்னதத்தாலே) தவழ்ந்தேறி நின்றுள்ள - குடுமி- சிகரத்தையுடைய-மாலிருஞ்சோலையிலே பதியென்றுத்திருப்பதியைச்சொல்லுதல்-எத்தி-எழுவது-உஜ்ஜீவிக்கிறது-பயனே - இவ்வாத்மாவுக்குப்பிரயோசனம்.

பயனல்லசெய்துபயனில்லைநெஞ்சே.....*
புயன்மழைவண்ணர்புரிந்துறைகோயில்.....*
மயன்மிகுபொழிலுந்மாலிருஞ்சோலை.....*
அயன்மலியடைவதுகருமமே.....(ஈ)

பயனல்லசெய்து- பிரயோஜனமல்லாதகாரியத்தைச்செய்து-பயனில்லை-பிரயோஜனமில்லை - புயல்மழைவண்ணர்-புரிந்து - ஆதரித்து-உறை-நித்தியவாஸஞ்செய்கிற- கோயில்- மயன்மிகுபொழில் சூழ்மாலிருஞ்சோலை- (கண்டவர்சித்தைகவருங்கடிபொழில் தென்னாங்கன்) என்கிறபடியேதரிசித்தவர்களுடைய இருதயத்தை ஆகர்ஷிக்கும்படியான பரிமளமுடைய திருத்தோப்புக்கு எதிர்த்தட்டாய்த் தரிசித்தவர்களுக்கு விஸ்தாரம் மயலையுண்டாக்கும்படியான மாலிருஞ்சோலை-அயன்மலியடைவதுகருமமே-அசல்மலியடைவது-அதுகருமமே-அதுதான்காரியம்.

கருமவன்பாசம்கழித்தழன்றுய்யவே.....*
பெருமலையெடுத்தான்பீடறைகோயில்.....*
வருமழைதவழுமாலிருஞ்சோலைத்.....*
திருமலைதிகழ்வதுதிறமே.....(உ)

கருமவன்பாசம் - கருமமாகிற - வன்பாசம் - கடினமான கயிற்றை - கழித்து- உழன்று- பகவத்விஷயத்தில் உழன்று - உய்யவே-உஜ்ஜீவிக்கவிச்சையுடையவர்கள் - பெருமலையெடுத்தான்- பீடு- மஹத்தியத்துடனே - உறைகோயில் - வருமழைதவழும் மாலிருஞ்சோலை-வருகிறமேகங்கள்உன்னதத்தாலேதவழாநிற்கிற-திருமலையதுவே- அடைவது- திறமே- நல்லபிகாரம்.

திறமுடைவலத்தாற்றீவினைபெருக்கா.....*
அறமுபலாழிப்படையவன்கோயில்.....*
மறுவில்வண்சுனைசூழ்மாலிருஞ்சோலை.....*
புறமலைசாரப்போவதுதிநிமே.....(ஊ)

திறமுடைவலத்தால்- திறம்- விஸ்தாரம்- வலம்- பலம்- விஸ்தாரமானபலத்தை ஔஷதத்தாலே புண்டாக்கிக்கொண்டு- தீவினைபெருக்காது- அறமுபலாழிப் படையவன் கோயில்-அறம்- தருமத்தில்-முயல் - உத்தியோகத்தையுடைய-(அதாவது ஜோதிஷ சாஸ்திரத்தில் மகம்மேருவில் சிம்சுமாலி சக்கரமானது சேதனர்களுடைய புண்ணியபாபங்களுக் குத்தக்கபடி நவக்ரஹங்களே அந்தந்தராசிகளில் சரியாய்ப்பிரம்மனிக்கும்படிசெய்கிற)- ஆழிப்படையவன்கோயில்-ஆயுதமாகவுடையவன் கோயில்- மறுவில்-களங்கமில்லாத-வண்சுனை சூழ்- உளத்துமாறுமல் பிரகாஸிக்கிற சுனைகளாலேசூழப்பட்ட-மாலிருஞ்சோலை- புறமலைசார-சமீபபருவதத்தைச்சேர-போவது-திநிமே- ஸாமர்த்தியம்.

திநினைநீனமின்கேழ்மைசெய்யாதே.....*
உதியமரிவெண்ணெய்யுண்டவன்கோயில்.....*
மதியொடுதிணைசேர்மாலிருஞ்சோலை.....*
நெறிபடவதுவேநினைவதுநலம்மே.....(ரு)

திநினை- ஸாமர்த்தியமென்று - நினைமின் - கேழ்மைசெய்யாதே- பாபவேறுபாடான நீசகிருத்தியங்களைச் செய்யாமல் - உதியமரிவெண்ணெயுண்டவன்கோயில்- மதியொடு-குட்டிகளோடு- திணைசேர்- மான்பேடைகள் சேரும்- மாலிருஞ்சோலை- நெறிபட-மார்க்கத்துக்குப்போகின்ற அதுவே-நினைவதுநலம்.

நலமெனநினையின்னமழுந்தாதே.....*
நிலமுணவிடந்தானீடறைகோயில்.....*
மலர்மருமதிசேர்மாலிருஞ்சோலை.....*
முறைமையெய்தியமருவுதல்வலமே.....(எ)

வலஞ்செய் துவைகல்வலங்கழியாதே.....*
வலஞ்செய்யுமாயமாயவன்கோயில்.....*
வலஞ்செய்யும்வானேர்மாலிருஞ்சோலை.....*
வலஞ்செய் துதாளுமருவுதல்வழக்கே.....(அ)

வழக்கெனதினைமின்வல்வினைமூழ்கா.....*
தழக்கொடியட்டானமர்பெருங்கோயில்.....*
மழைக்களிற்றினஞ்சேர்மாலிருஞ்சோலை.....*
தொழக்கருதுவதேதுணிவதுசூதே.....(கூ)

அழக்கொடி - அழல்என்ற பேய்க்குப்பெயர் - கொடிஎன்ற பெண்ணுக்குப்பெயர்- பேய்ப்பெண்ணென்றபடி- அழலென்றுபிணமாய்அத்தாலே பேயென்றபடி-பூதனையைமுடித்தவன்-மழைக்களிற்றினஞ்சேர்மாலிருஞ்சோலை - மழையைப்போல் மும்மதத்தள் பெருகப்பட்டயானைகூட்டங்கள்சேரும்-மாலிருஞ்சோலை- தொழக்கருதுவதே-துணிவது-விசுவஹிக்கிறது-சூதே- புருஷார்த்தம்.

சூதென்றுகளவுஞ்சூதுஞ்செய்யாதே.....*
வேதமூன்றினித்தான்விரும்பியகோயில்.....*
மாதரும்மயில்சேர்மாலிருஞ்சோலைப்.....*
போதவிழ்மலையேபுகுவதுபொருளே.....(ஙி)

சூதென்று- அர்த்தலாபகமென்று -நல்லவாய்ப்பாயிருந்ததென்று- களவுஞ்சூதுஞ் செய்யாதே- போது- புஷ்பங்கள்- அவிழ்-விகஸியாநிற்கிற- மலையே- புகுவது- பொருளே-புருஷார்த்தம்-பிரயோஜனமாய்த்தலைக்கட்டும்.

பொருளென்றிவ்வுலகம்படைத்தவன்புகழ்மேல்.....*
மருளில்வண்குருகூர்வண்சடகோபன்.....*
தெருள்கொள்ளச்சொன்னவோராயிரத்துளிப்பத்.....*
தருளுடையவன்ரூளணைவிக்குமூடித்தே.....(ஙக)

பொருளென்று- சரியோஜனப்படி மென்று-இவ்வுலகம்படைத்தவன்புகழ்மேல் (வாழ்த்துவார்பலராக நின்னுள்ளேதான்முகிழ்-மூழ்த்த நீருலகெல்லாம்படை யென்றுமுதல் படைத்தாய்) மங்களாசாஸனம்பண்ணப்பட்டஅதிகாரிகள் பலருண்டாகவேண்டுமென்றாபிமானப்படைத்தானென்கையால் இவ்வாத்மாக்கள் மோக்ஷரூபமாம்ராஜ்ஜியத்தைபடையவேண்டுமென்றேஇவ்வுலகத்தைப்படைத்தவன்புகழ்மேல்-தெருள்கொள்ளச்சொன்ன ஓராயிரத்துளிப்பத்தை

தெருள்கொள்ள - இயானத்தையடையும்படி - அருளுடையவன்தானணைவிக்கும்- அணைவிக்கும்- சேர்த்துவிடும்.

இரண்டாம்பத்து முற்றிற்று.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

மூன்றாம்பத்தின்கடைகில் திருவாய்மொழியில் (மணியைவானவர்கண்ணனைத்தன்னதோரணியை) என்றுவிலக்ஷணவிஷயமாகையாலே பிரிந்தாரைக் கண்ணழிஞ்சுழலை யிடப்பண்ணுமென்றூர் வாயுத்தினையுகளில்- அவ்வவாபாதி கூடிஞலும்மறப்பிக்கு மென்றூர்திண்ணன்வீட்டில்- கூடிணவிஷயத்தான் நிரதிசயசுகரூபமென்றூர் ஊனில்வாழுயிரில்- அவ்விஷயத்துக் குத்தேசிகமோட்டயனுபவிக்கப் பெறுமையாலேமோவறாங்கதாளுர் ஆடியாடியில் - தாமாசைப்பட்டபடியே வந்துகலந்தபடி சொன்னூர் அந்தாமத்தன்பில்- தம்மிழவுக்கும்அவன் அநிசங்கை பண்ணுமென்றூர் வைகுந்தாமணி வண்ணனில் (அதாவது எம்பெருமான்கலந்தபின்பு ஆழ்வார்தம் முடைய நீச்சத்துவத்தை யனுஸந்தித்து அலைப்புக்கவாம்ற அத்தை ஈசுவரன்கிந்தித்து றைகின்றபிரகாரத்தை ஆழ்வார்கண்டு ஆகில் தானுன்னை விடேனென்றுரைக்க ஈசுவரன்றிடமாளுனென்னை) தம்மும்டையஸம்பந்த ஸம்பந்திகளையும் விஷயீகரித்தபடி சொன்னூர் கேசவன்றமில்- அவனுடைய மோக்ஷப்ரதத்துவத்தை யருளிச்செய்தார் அனவதாவணையில்- பிராப்பியநிஷ்டருஷிபண்ணினூர் எம்மாவீட்டில்-நிஷ்டருஷித்த பிராப்பியத்தை லபிக்கைக்குதிருமலையாழ்வாரர்தாமாரூயித்துப் பரோபதேசஞ்செய்தார் இளைவியிளமையில்.

மூன்றாம்பத்து.

முதல்திருவாய்மொழி.

அவதாரிகை.

பொருளென்றிவ்வுலகம்படைத்தவன்புகழ்மேல்மருளில் வண்குருகூர்ச்சடகோபன் என்று அவன்கலியாணகுண விஷயமாக அநியானமில்லையென்றூர் மேற்திருவாய்மொழியில்- அந்தக்குணநீக்கவிஷயத்தன்னிலே ஒரு அக்கியானம் அனுவர்த்திக்கிறபடி சொல்லிருளில்-மேற்சொன்னயொளத்துக்கடி கருமமாயிருக்கும்-இத்தை அக்கியானத்துக்கடி விஷய வைலக்ஷணியமாயிருக்கும்-

நித்தியசூரிகளுக்குமுள்ளதொருசம்சயமாயிற்றிது - திருமலையை யுபவித்துக்கொண்டு வரச்செய்தே கற்பகத்தருபணைத்துப்பூத்தாப் போலே நிற்கிற அழகருடைய சௌந்தரியத்தை யநுபவித்து வே தங்களோடு மை தீ புருஷர்களோடு பிரம்மருத்திராதிகளோடு வாசி யற ஸ்வயத்தனத்தாலே காணுமன்றுகாணவொண்ணுதபடியா யிருக்கிறவிருப்பையும், தானேகொடுவந்து காட்டுமென் றுஜ்ஜீவிருத்தா தினாலே குறையதின்றூர்க்குங் காணலாம்படி யிருக்கிற யிருப்பை யும் அனுஸந்தித்து விஸ்மிதராகிறார்-அதாகிறது-ஆச்சரியப்படுதல்.

க - பாசுரம்.

கலிவிருத்தம்-பண்-இந்தளம்- தாளம் - நடையொத்து.

இதை இப்போது குண்டக்கிரியாராகத்திலும் அபூரூப ராகத் திலும் ஆதிதாளத்திலும் பாடிக்கொண்டுவருகிறார்கள்.

முடிச்சோதியாயுன தமுகச்சோதிமலர்ந்ததுவோ.....*
அடிச்சோதிநீநின்றதாமரையாயலர்ந்ததுவோ - ... .*
படிச்சோதியாடையொடும்பல்கலனுய்நின்பைம்பொற்... .....*
கடிச்சோதிகலந்ததுவோதிருமாலேகட்டுரையே... ... .*

முடிச்சோதியாயுன தமுகச்சோதிமலர்ந்ததுவோ- உனதமு கச்சோதிமுடிச்சோதியாய் மலர்ந்ததுவோ வென்று மாறிச்சொல்ல வேண்டியது-இப்படி இவர் விகல்பித்துச்சொல்லுகைக்குக்காரணம் ஐப்பசிமாதம்-எவ-நீபாந்தரத்தில் பிள்ளைக்குக்கொக்குவன்மதி லங்கிநில பிரியுமாப்போல்இவரும் மறிகலக்கி உன்னுடையதிருமு கத்திலுண்டானதேஜஸான தானது திருவபிஷேகத்தில்தேஜஸாய்விகசிதமா யிற்றோ - உன்னுடைய திருவபிஷேகத்தில்தேஜஸான தானது திருமுக மண்டலத்தில தேஜசாய்மலர்ந்ததுவோ-(திருவபிஷேகத்தில்தேஜ தி ருவடிகளில்போயவிழ்ந்து அடிச்சோதிநீநின்றதாமரையாயலர்ந்த தாவோவென்கிறார்) இதுவும்முன்போல் மாறிச்சொல்லக்கடவது-தி ருவடிகளில்தேஜஸான தறக்கொழித்தது - கடலுக்குட்பட்டதொரு நிலம் ஒருநிலையொருநிலையில்லை தள்ளக்கிடந்தலையுமாப் போலே ஓரழகுவேறோரழகில்லைதள்ளக்கிடந்து அவற்றையநுபவி க்கிறார்-படிச்சோதியாடையொடும்பல்கலனுய்நின்பைம்பொற்-படி ச்சோதிகலந்ததுவோ திருமாலேகட்டுரையே-படிச்சோதி-படி- திருமேனி - திருமேனியழகு-பல்கலனுய்க்கலந்ததுவோ-கலன் -ஆ பரணம்-பல்வகைப்பட்ட ஆபரணங்களாய்க்கலந்ததுவோ-பல்கல ன்,படிச்சோதியாய்க்கலந்ததுவோ-சோதியாடை-கடிச்சோதி-க லந்ததுவோ-கடி-இயற்பு-கடிச்சோதி; உடையாய்க்கலந்

நின்பைம்பொற்கடிச்சோதி, படிச்சோதியாடையொடும் பல்கல னுய்க்கொண்டுகலந்ததுவோ-திருமாலேகட்டுரை-இதுக்கொருபோ க்கடியருளிச்செய்யவேண்டும்.

கட்டுரைக்கிற்றுமனநின்கண்பாதங்கையொவ்வா.....*
சுட்டுரைத்தநன்பொன்னுன்திருமேனியொளியொவ்வா.....*
தொட்டுரைத்திவ்வுலகுன்னுப்புகழ்வெல்லாம்பெரும்பாலும் ... *
பட்டுரையாயப்புற்கென்றேறகாட்டுமாற்பாஞ்சோதி... ... ...(உ)

கட்டுரைக்கில்-நன்முகவிசாரிக்கில்-தாமரை-தாமரையான தை-நி ன்-உன்னுடைய-கண்-பாதங்-கை- இதுகளுக்கு - ஒவ்வா-ஒவ்வாதுகா ட்டி - புடம்போட்டு-உரைத்த - மெருகெடுத்த - நன்பொன் - நல் லதங்கமும் - உன்திருமேனி யொளி - உன்திருமேனிகாந்திக்கு - ஒவ் வாது-சதுரசமாகமாட்டாது -ஒட்டி-உபமானத்தை-உரைத்து-சொ ல்லி-இவ்வுலகு -இந்தலோகமான தை- உன்னை - புகழ்வெல்லாம்-புக ழ்வதெல்லாம்- பெரும்பாலும் - மிகவும்-பிராயேண-பட்டுரையாய்- பட்டுத்துணைக்கை - அதாவது அகப்பட்டமட்டில்சொல்லுகை-அத் தாலே - புற்கென்றே - புன்மையைச்சொல்லுகிறதாயே - காட்டு மால்-காட்டாநின்றது-அன்றிக்கே - (ஒட்டுரைத்திவ்வுலகுன்னுப்புக ழ்வெல்லாம்) இவ்வுலகு - இந்தமேததக்கள் - உலகு - என்றுவேதத் தைச்சொல்லுமோவென்னில் - (எல்லீரும்வீடுபெற்று லுலகில்லை யென்றே) என்றிவரருளிச்செய்ததில் எம்பெருமானைபரராகூஷஸர் கள்தபசுசெய்து தன்னிடத்தில் வரங்கொடுப்பெற்றுச் சாதுக்களான தேவருஷிகளைநலித்து எல்லீரும் வீடுபெற்றால் (உலகில்லை யென் றே) உலகு-சாஸ்திரம்-இல்லையென்றே - (தன்னைப்பற்றினவாதுக் களைநலிந்தவர்களுக்கு நரகமென்றும் சாதுக்களுக்குமோக்ஷமென் றுஞ்சொல்லுகிறசாஸ்திரமரியாதை)இல்லாதேபோய்விடுமென்றும்-

ஏதாஸ்மிலோகே வேதீசப்ரதிதஃபுருஷோத்த மஃ|| லோகமென்கிறவேதத்தில் பி ரஸித்தமானகாரணனென்றேதப்படி மவன்என்ற பிரமாணத்தையு ம் உதஹரித்திருக்கையால் உலகு என்று வேதத்துக்குப்பெயர் நி ச்சயமாயிற்று - (இவ்வுலகுன்னுப்புகழ்வெல்லாம்) வேதமென்றசா ஸ்தோக்தியத்தில்- ஹிரண்மயபுருஷஃ|| ஸ்வர்ணமயமான திருமேனியை யுடையவன்- தஸ்யயதாகப்யாஸம்புண்டரீகமிவாக்ஷிணீ| சூரியனுலேவிகா ஸம்பண்ணப்பட்ட தாமரைபோன்ற கண்களையுடையவ-னென்று முந்தம் - பெரும்பாலும் - புற்கென்றேகாட்டுமால்என்னவு மாம - இப்படிபுன்மையாகக்காட்டுவதற்கு வேறு-பாஞ்சோதி-

சருதி- நாராயணஃபரஜ்ஜோதிஃ என்றுநாராயணன் பரமமானஜோ திர்மயமானதிருமேனியையுடையவனென்று விஜாதியருக்குச்சொ ல்லுகையால்பராஞ்சோதிஎன்கிறார்.

பராஞ்சோதிநீபராமாநின்னிலஞ்நதபின்மற்றோர்..... .....*
பராஞ்சோதியின்மையிற்படியோவிநிகழ்ந்தின்ற..... .....*
பராஞ்சோதிநின்னுள்ளேபடருலகம்படைத்தவெம்..... .....*
பராஞ்சோதிகோவிந்தாபண்புரைக்கமாட்டேனே..... ... ..(ஈ)

பராமாய்-பரவஸ்துவாயிருக்கின்ற-பராஞ்சோதிநீ - பரஞ்சோதிஸ்வ ரூபனானநீ-நின்னிலஞ்நதபின்-உன்னைவிட்டால்-மற்றோர்பராஞ்சோ தியின்மையில் - சருதி- நதத்ஸமஶ்சாப்யதிகஶ்சதிருஶ்யதே॥ உனக்குச்ச மானமானவர்களும் அதிகர்களுமில்லையென்று-(உ-ச-சூ-ம-ம்க-ம்உ-ம் பக்கங்களில் சொன்னசருதி களுக்குவிவரமாயச்சொல்லி யிருக்கை யால்) உன்னைவிட்டால் மற்றோர்பராஞ்சோதியில்லாமையிறலே- ப டியோவி- சமானமில்லாமலே - நிகழ்ந்தின்ற-வர்த்தியாநிற்கிற - பரா ஞ்சோதி- பராஞ்சோதிஸ்வரூபமான - நின்னுள்ளே - உன்னுடைய மென்கிறநினைவிலே- படர்-விஸ்தருதமான- விரியும்படியான-உல கம்-லோகத்தை-படைத்த-சிருஷ்டித்த-இதற்குப்பிரமாணம்-(ம-ம் ப க்கத்தில் பிரம்மருத்ராதிகள் விஷ்ணுவின்நாபிக் கமலத்திலுண்டானா ர்களென்றும்-)யகம்பக்கத்தில்சருதி- அதபுருஶோஹவை நாராயணஸ்ஸ ஹ்யகாமஃமனஸாத்யாயத॥ ஸ்ரீமந்நாராயணன்தன் இச்சையாலி வர்களைச்சிருஷ்டித்ததாய்ச்சொல்லியிருக்கின்றது-என்பராஞ்சோதி- கோவிந்தா-பண்பு-உன்பிரபாவத்தை - மாஹாத்மியத்தை - உளாக்க மாட்டேனே - ஸ்துதிக்கலமர்த்தனன்று.

மாட்டாதேயாகிலுமிம்மலர்தலமாஞாலநின்..... .....*
மாட்டாயமலர்புனையுந்திருவுருவமனம்வைக்க..... .....*
மாட்டாதபலசமயமதிகொடித்தாய்மலர்த்துழாய்..... .....*
மாட்டேநீமனம்வைத்தாய்மாஞாலம்வருந்தாதே..... .....(உ)

இம்மலர்தலமாஞாலம்- திருநாபிகமலத்தை உத்பத்திஸ்தான மாகவுடைய மஹாப்பிரதிவி- நின்- தேஹரூபமான-மாட்டாய - ம ட்டை மாட்டென்று நீட்டிக்கிடக்கிறதாய் - மட்டு-பரிமளம்- அல த்தின் பரிமளம்போலே போக்கியமான திருமேனி யென்றதா- மாகி-சம்பந்த - தனம் - ஆஸ்ரிதருடைய தனமான - மனம்புகுரு ம்-நீலோத்பல புஷ்பத்துக்குச் சமானமான - திருவுருவம் - நிறு

மேனியிலே-மனம்வைக்க-மனசைவைக்கைக்கு - மாட்டாதேயாகிலு ம்-ஸாமர்த்தியமன்றியிலேயிருந்தாலும்-ஆகிலும்மென்றதுமாட்டா திருக்கச்செய்தே யென்றபடி- மாட்டாத- காரணவஸ்துவின்னதெ ன்றுதெரித்து கொள்ளமாட்டாத- பலசமயம்- வெகுமதங்களிலே- மதி-புத்தியை- கொடித்தாய்-(பரமகாருணீகன் பல்சமயங்களில் ம திகொடுக்கையாவது-கீதையில்-ஶ்ருதிஸ்ம்ருதிர்மமைவாஜ்ஞாயஸ்தாமுல்ல ங்ஷ்யவத்தே॥ஆஜ்ஞாச்சேதிமமத்ரோஹாஃ॥ சருதியும்ஸ்மிருதியும்என்னுடை ஆக்கினை- அவைகளைவார் உல்லங்கனம் பண்ணிநடக்கிறார்களோஅவ ர்கள் என்னுக்கினையைச்சேதித்தவர்கள்- எனக்குத்துரோஹி களாய் விடுவர்கள் - என்றருளிச்செய்து-தானஹம்த்விஷதஃக்ரூராந்ஸம்ஸா ரேஷுநராதமான்॥க்ஷிபாமி॥துவேஷிகளாய் குரூரர்களான நராதமர்க ளைச்சம்சாரத்திலேபுதைக்கிறேனென் றருளிச்செய்கையால் இப்ப டிப்பட்டவர்களுடைய கருமங்களுக்குத் தக்கப்படியே சம்சாரத் துக்குஹேதுவான பலசமயங்களிலேமதியைக்கொடுப்பன்)-(அப் படிப்பட்டவர்களுக்கும் தன்னம்மந்தத்தாலே திருவடியுண்டாக்க வேண்டுமென்றிவர்கருத்து) மலர்த்துழாய்மாட்டே- திருத்துழாயி னிடத்திலே- நீ மனம்வைத்தாய் - திருத்துழாய் விஷயத்தில் நீமன தைவைத்தாயாகில் - மாஞாலம்வருந்தாதே - வருத்தப்படாதோ- அ தாவது சருமத்தால் தாகாதிகளே யடையாதோவென்றுகருத்து.

வருந்தாதவருந்தவத்தமலர்க்கதிரின்சுடருடம்பாய்..... ... .*
வருந்தாதஞானமாய்வரம்பின்றிமுழுதியன்றுப்..... .....*
வருங்காலநிகழ்காலங்கழிகாலமாயுலகை..... ....*
ஒருங்காகவளிப்பாய்சீரொங்குலக்கவோதுவெனே..... .....(ஊ)

வருந்தாதவருந்தவத்த - இப்பாசுரத்துக்குவியாக்கியானம்-ச- ம்-பக்கத்தில்கண்டுகொள்வது- வருந்தாதஞானமாய் -பிரம்மருத்தி ராதிகளாருத்தப்படுத்தபசுசெய்துவேதங்களோயறியும்படியானதி யானத்தையுஞ்சரீரத்தையும்அடைகிறதாய்ஷ-பக்கத்தில்சருதிசொ ல்லியிருக்கையால்உன்னுடையவியாபனம்வருந்தாதவியானமென்கிறு ர்-வரம்பிறை-வரம்பு என்றுஎல்லையாய் எல்லையில்லாதகலியாண குணங்களிறலே-முழுது-சகலபதார்த்தங்களையும்-இயன்றுப்-வியாபி த்துக்கொண்டிருக்கிறுப் - தன்றி - வரம்பின்றி- நித்தியஞானிகளெ ன்றும் பிரம்மருத்திராதிகளென்றும் மனுஷ்ய திர்யக்குகளென்று ம் வரம்புவையாமல்-முழுதும்-எல்லாவையும் - இயன்றுப்- வியாபி த்தாய் என்னவுமாம்-இன்னொன்றில்வரம்பில்லாதகலியாணகுண

ங்கள் தன்கடைபேசித்திருக்கின்றது - இவ்வுலகவர்த்திக்கை-வி
யாபிக்கை-பிரகாசிக்கை-நிர்வஹிக்கை-நிர்வஹித்தாய் - வருங்கால்
நிகழ்காலம்கழிதாவமாய்- செம்முசெல்லாதன முன்னிலாங்காவமே
என்கிறபடியே நித்யகால ஸ்வரூபியாய்-உலகை-ஒருங்காக-ஒரு ப
ப்பட-எகரூபமாக - அளிப்பாய்-ரக்ஷிக்கிறஉன்னுடைய-சீர்-கல்யா
ணகுணங்களை- எப்து- எவ்விதமாக-உலக்க - முழுமையும்- ஓதுவெ
னை-ஸ்துதிக்கக்கடவேன்.

ஓதுவாரோத்தெல்லாமெவ்வுலகத்தெவ்வவையுஞ்.....*
சாதுவாய்நின்புகழின்றகையல்லாற்பிறிதில்லைப்.....*
போதுவாம்புனைத்தூழாய்முடியினாய்பூவின்மேல்.....*
மாதுவாழ்மார்பினனேயன்சொலியான்வாழ்த்துவனே.....(ஈ)

ஓதுவாரோத்தெல்லாம் - ஓதுவாரென்னையாலே அதிகாரிவை
வித்தியத்தைச்சொல்லுகிறது - விஹிதமான-வெவ்வேறான சமயஸ்த
ரென்றபடி-ஓத்தெல்லாம்-ஓக்து-வேதம்- ஓத்தெல்லா ரென்கையால்
இருக்கு-எஜு-சாமந்தானச்சொல்லுகிறது- ஆகையிலே அதிகரிபயனம்பண்
ணுகிறவர்களுடைய பேதத்தாலே சாகாம்பதங்களாய்க்கொண்டு பி
ரிவுண்டவேதங்களெல்லாம்-எவ்வுலகத்தெவ்வவையும்-எவ்வுலகம்என்
கையால்பிரம்மலோகம் ஸ்வர்க்கலோகம் முதலான லோகங்களைச்
சொல்லுகிறது-எவ்வவையும் என்கையால் அந்தந்தலோகங்களிலுள்ள
வர்களுடைய வியானங்களுக்குத் தக்கபடி ஆயிரஞ் சாகைகளாயும்
நாலுசாகைகளாகவும்விரிந்தஞ் சுருக்கியு மிருக்கிறபடியைச் சொ
ல்லுகிறது-என்போலவெனில் (தேவலோகத்திலும் பிரம்மலோகத்
திலும் ஸ்ரீராமாயணம் நூறுகோடி சுலோகங்களாய் விரிந்திருக்கு
மவை இவ்வுலகத்தில் (உசத) சுலோகங்களாய்ச் சுருங்கியிருக்குமாப்
போல;(சுலோகமென்கிறது-ஈ-அக்ஷரங்களையுடைய ஒருசுவ்வாகம்)
சாதுவாய்-சப்தத்துக்கு ஸாதுத்துவமாவது அர்த்தத்துக்குப்போத
கமாயிருக்கை-அன்றியே சாதுவானபுகழென்றுமாகவுமாம்-நின்
ஷணமாகவுமாம்-நின்புகழின்றகையல்லால் - உன்கலியாணகுணக்க
ளுடைய-தகையல்லால் பிரதாரமாத்திரத்தைச் சொல்லுகிறதன்றி
க்கே-பிறிதில்லை - எல்லாங்காண மாட்டா - அன்றியே சாதுவாய்
நின்புகழின்தகையல்லால் பிறிதில்லை - உன்னுடைய கலியாண கு
ணவிஷயமான வித்தனைபோக்கிப் புறம்புபோய்த்தில்லை - வருதி
ஸர்வே வேதாயத்பதமாமனந்தி॥ ஸமஸ்தவேதங்களும் ஸ்ரீமந் நாராய
ணனுடையபதத்தையே ஸ்துதிக்கின்றதென்றுஞ் ஸர்வேவேயந்
மாமாமனந்தி॥ ஸமஸ்த வேதங்களும் ஸ்ரீமந் நாராயண

மஹிமைகளையே ஸ்துதிக்கிறதென்றும் சொல்லியிருக்கின்றது-
இந்தச் சுருதியை மொழி பெயர்த்தாப்போல் ஸ்ரீ கீதையில் -
வேதைஶ்சஸர்வைரஹமேவவேத்யஃ॥ ஸமஸ்தவேதங்களிலும் நானேயன்
றோயறியப் படுமவன் என்றும்ஸ்ரீவிஷ்ணு ஸ்வரூபத்தில் அருளிச்செ
ய்தான்-இன்னமும்போதாயனவிருத்தியில்- வேதாக் ராணியாவந்தி॥
பரிதானிவ்விஜாதிபிஃ॥தாவந்தீஹிநாமானிகித்தானினஸம்ஶயஃ॥ ப்ராம்ம
ணர்களாலே படிக்கப்படுகின்ற வேதாக்ஷாங்கள் யாவற்றும் ஸ்ரீஹ
ரியினுடைய திருநாமங்களையே கீர்த்திக்கிறதென்று போதாயனர்
அருளிச்செய்தார்-சுருதிகளில்-அஜதிவிஷ்ணோ ப்ரதமனா மோச்யதே॥ அகார
ப்விஷ்ணுவுக்குப்பிரதான திருநாமமென்றும் - வந்தேவிஷ்ணுமோங்கார
வாச்யம்॥ ஓங்காரத்துக்குப் பொருளான விஷ்ணுவைச்சேவிக்கிறே
னென்றுஞ் சொன்னவைகளில் அகாரமும் ரகாரவமும் விஷ்ணு
வைச்சொல்லுகையால் அகார விவரணங்களான வேதக்களும் விஷ்
ணுவையேசொல்லுகிறதென்றருளிச்செய்தார்.

வாழ்த்துவார்பலராகநின்னுள்ளேநான்முகனை.....*
ஆழ்த்தநீருலகெல்லாம்படையென்றமுதல்படைத்தாய்.....*
சூழ்த்தசீரான்முதலாக்களிர்தெய்வமாய்க்களிர்த்து.....*
வாழ்த்தமார்தரித்தாலுன்னெருல்புகழ்மாசுண்ணுமே.....(எ)

இத்தப்பாசுரத்துக்குப் பொருள்-ராசயஅம் பக்கத்தில்கண்டு
கொள்வது.

மாசுண்ணுச்சுடருடம்பாய்மலராதுகுவியாது.....*
மாசுண்ணுஞானமாய்முழுதுமாய்முழுநியன்றாய்.....*
மாசுண்ணுவான்கோலத்தமரர்கோன்வழிபட்டால்.....*
மாசுண்ணுவுனபாதமலர்ச்சோதிமழுங்காதே.....*

மாசுண்ணுச்சுடருடம்பாய்-மாசு-குற்றம்-அவத்தியம்-உண்ணு-அ
டையாத-சுடர்-பிரகாசமான-உடம்பாய்-திருமேனியுடையையும்-ம
லராது-விகாஸங்களும்-குவியாது-ஸங்கோசமுமில்லாது- அதாவது
ருக்-ம்பக்கத்தில்சொன்னபடியே - ஷட்பாவவிகாரக்களில்லாமல்
சுருதி-சதேக்ரூபரூபாயை॥ என்கிறபடியேஎஸார்வகாலமும் ஓரேபி
ரகாரமான ரூபத்தையுடையையும்-மலராது-குவியாது-சுருதி- அபஹத
பாப்மா॥ பாபமில்லாதவன்-விஜரோ॥-ஜராயில்லாதவன்- விமிருத்யுஃ॥ மா

ணமில்லாதவன்-அசோகன்॥ சோகமில்லாதவன்-விசிகித்ஸ:॥ பகையில்லாதவன்-அபிபாஸ:॥ தாஹமில்லாதவன்-சத்யகாம:॥ நித்தியமான விச்சை யுடையவன்- இச்சைக்குக்கெடுதலில்லாதவன்-சத்யசங்கல்ப:॥ நினைத்ததற்கு விருத்தமில்லாதவன்-என்கிற எட்டுக்குணங்களையுடையவன்-(குறமுனிவன் மூத்தமிழுமென்குறளுநற்கைச் - திறமுனிவன் வாய்மொழியின்சேய்) என்றகுறமுனிவனுடைய அகஸ்தியனுடைய இயலிசைநாடகமென்கிற மூன்றுவகைப்பட்டதமிழும் - என்னால் சொல்லப்படுகின்ற குறள்என்கிறசாஸ்திரமும் (உடையநங்கை) யின்குழந்தைப்பருவத்தை எப்போதுமுடைய சடகோபரா லருளிச்செய்யப்பட்டதிருவாய்மொழிக்குக் குழந்தைகள்என்றவள்ளுவனும் (கோனில்பொறியிற்குணமிலவேயெண்குணத்தான்- முனிவனங்காத்தலில்) என்ற இப்போது சுருதியிற்சொன்ன எட்டுக்குணங்களையுடையவனை - முனிவனங்காத்தலியலுலேபிரயோஜனமில்லையென்று செய்தருளினார்-இவ்வெட்டுக்குணங்களையுடையவனிவனென்றுசைவாகமத்தில் சொல்லப்பட்டிருக்கின்றதாய் வேதாந்தமறியாத சிலசூத்திர பிராயர்களெழுதினார்கள் - அதை வேதாந்தசூத்திரத்தாலே கண்டதஞ்செய்கிறேன்-மூதலில்இவர்களுக்குப்பிரமாணமாக ஒப்புக்கொண்டசைவாகமத்தை வியாஸரும்சங்கராசாரியரும்சைவாகமம்வேதவிரோதமென்று கண்டித்திருக்கிறார்கள்-அதாவதுவேதாந்தமாகியபிரம்மசூத்திரத்தில்-உ-ம்-அத்தியாயத்தில் ஒருசூத்திரத்தில் பசுர்ந சாமஞ்ஜஸ்யாத்॥ பசுவென்றதிரிபுராவிஜயஞ்செய்துகொடுக்கும்படி தேவர்கள்சிவனுக்குக்கொடுத்தபெயராகையாலிவனுல்சொல்லப்பட்டமோஹனசாஸ்திரமாகியசைவாகமம்முக்கியமல்லவென்றுகண்டித்தார்-இத்தசூத்திரத்துக்கு அத்வைதபாஷ்யஞ்செய்த சங்கராசாரியர் சங்கரபாஷியத்தில் - பசுர்ந தம்பசு பதம் அனாதரணீயத்வாத்॥ எஷ்றும்-அசாமஞ்ஜஸ்யாத்॥ என்றும்-அசம்கதத்வாதித்யுக்தம்॥ என்றுசைவாகமம்சுருதிக்குவிரோதிக்கிறபடியால்அங்கீகரிக்கத்தக்கதல்லவென்றும்அனர்த்தமென்றும் அனுமஞ்சபமென்றுக்கண்டித்தார்-இனியெண்குணத்தில் முக்கியகுணமாகியபாபமில்லாதவனென்றும்மரணமில்லாதவனென்றுஞ்சொல்லுவதற்குச்சுருதி-அபஹதபாப்மா திவ்யோதேவஏகோநாராயண:॥ நாராயணன்பாபமில்லாதவனென்றும்-உ-ம் பக்தத்தில்-உ-ம் வரியில்இவன்வாக்கு-அநஸ்நன்நபிபாஸன்॥

என்றுபோக்கப்படாதபாபத்தையுடையனுகிறேனென்றும்-உ-ம்பக்கத்தில்பிரம்மருத்திராதிகளிறந்தநாராயணனெருவனேமுடிவிலிருக்கிறனென்றுஞ்சொல்லியிருக்கையால்எட்டுக்குணங்களையுடையவன் ஸ்ரீமந்நாராயணனே என்றறியலாம்-மாசுண்ணுஞானமாய்-ஒருஹேதுவாலேயும் மாசேறக்கடவதல்லாத இயன்கையை யுடையையாய்-மலராதகுவியாது-மாசுண்ணுச்சுடருடம்பாய் மலராதகுவியாதுமாசுண்ணுஞானமாயென்றுஇரண்டிடத்திலுமறுவயிக்கட்டவதுசுருதி-ஸ்வாபாவிகீஜ்ஞானபலக்ரியாச்ச॥ என்றதில்வேறெருருஹேதுக்களால்மலினம்வராமல் ஸ்வபாவமானகியாஞானத்தையும் அப்படிப்பலத்தையுமுடையவனென்கையால்குவியாதகியானத்தையுடையையாயென்கிறார்-முழுதுமாய்-இன்னுமும்சொல்லுக்குட்படாதகலியாணகுணங்களையுடையையாய்-ஜகச்சரீரனுய்நிற்கும்நிலபாதல்-முழுதியன்றாய்-வரம்பிறிமுழுதியன்றாய்-என்றதின்-அனுபாஷணம் -அந்தரியாமியாய் நின்று எல்லாவத்தையும் நிர்வஹித்தாயென்றபடி- மாசுண்ணுவான்கோலத்தமார்கொன்வழிபட்டால் - பிரமன் தொழுதால் மாசுண்ணுவுனபாத மலர்ச்சோதிமழுங்காதே - உன்திருவடிகளின் தேஜசானது (இவன்எத்தமளவே இத்திருவடிகள்) என்றுமழுங்காதோ-தம்முடைய சேஷித்துவாநுரூபமாக உன்திருமேனியென்னுதே உனபாதமென்கிறார்.

மழுங்காதவைநுதியசக்கரநல்வலத்தேயாய்த்... ....*
தொழுங்காதற்கனிறனிப்பான்புள்ளூர்ந்துதோன்றினையே... ... *
மழுங்காதனுனமேபடையாகமலருலகிற் ....*
தெழுமும்பாயார்க்களித்தாவுன்னடர்ச்சோதிமறையாதே ... ... (கூ)

மழுங்காத-மழுங்குதலில்லையுடையாத - வை- கூர்மையுடைய- நுநுனி- முனையையுடைய - சக்கர - நல்வலத்தையாய் - தொழுங்காதற்கனிறனிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே - (கவளமாகனிற்றினிடர்கெட) வென்றதில் ஆனைக்குஇடராவது இப்படிப்பட்டவாபத்தில்வந்துதவாவிடில்லகத்தார் ஈசுவானிருந்தால் இப்படிப்பட்டதசையில் வந்துதவாரே வென்பர்களே நம்மால் லகத்தாருக்கு ஈசுவானில்லையென்ற அக்கியானமூண்டாகவேண்டுமாவென்றதுக்கமொழியத்தன்சரீரம்போகிறதில் துக்கமன்று - இப்படிப்பட்ட கருத்தையுடையவன் துக்கம்போம்படி தோன்றினையே யென்கிறார்- இப்படிதோன்றுமல்-மழுங்காதஞானமேபடையாக - தம்முடையகியானத்தையேசாதனங்களில் எவரிந்நிலையும் மழுங்கக்கடவவல்லதகியானமே சருவியாக அல்லதுஆயுதமாக மலருலகில் தொழு

ம்பாயார்க்கு- சேஷபூதராய்த்தொழப்பட்டவர்களுக்கு-அளித்தால்-உப்கரித்தால்-உன்- உன்னுடைய-சுடர்ச்சோதி- மிக்கதேஜசையுடையதிருமேனி - மறையாதே - பிரம்மத்துக்கு ரூபமில்லையென்ற அத்வைதிகள் பகும்பித்தியாதோ- உண்டென்ற விசிஷ்டாத்வைதிகள் பகும் மக்னத்தை யடையாதோ அன்றிக்கே உன் சுடர்ச்சோதி மறையாதே- ஈசுரனேயில்லை என்ற நிரீசுவரவாதிகள் பகும்பித்தியாதோ-ஈசன்என்கிறஈசுவரவாதிகள் பகும்மக்னத்தையடையாதோ.

மறையாயதால்வேதத்துண்ணின்றமலர்ச்சுடரே .....*
மூறையாலிவ்வுலகெல்லாம்படைத்திடந்துண்டுமிழ்ந்தளந்தாய்...*
பிறையேறுசடையானுநான்முகனுமிந்திரனும்.....*
இறையாதலறிந்தேத்தவீற்றிருத்தலிதுவியப்பே..... ...(ஈ)

மறையாய-மறையென்றும் வேதமென்றும் சுருதிக்கு இரண்டுவகையாணபெயருண்டு-வேதபாஹ்யராம் நாஸ்திகராயிருப்பார்க்குத்தன்படிகளைமறைத்தும் ஆஸ்திகராயிருப்பார்க்குத்தன்அர்த்தத்தைவெளிப்பட்டும் இரண்டுவகைப்பட்டிருக்கையால் மறையாயநால்வேதத்துள் நின்றமலர்ச்சுடரே என்கிறார் - நால்வேதத்துள் நின்ற- சுருதி- ஸ்ருதிர்நஸிவிதீஸ்ரேஷ்ட சுருதியின் சிரசாகியபிரணவத்தில்பிரகாசிக்கப்பட்டவ னென்றுசொல்லி யிருக்கையால் நால்வேதத்துள் நின்றவென்கிறார்-இதற்குவிவரம்-ஈடுஉ-ம்-பக்கத்தில்கண்டுகொள்வது முறையாய்-மாதாபிதாபிரதாஎன்கிறமுறையாலேஎன்றுதல்-பரியாயேண ஏன்றுதல் - இதுவியப்பே-நீஇறையென்கிற முறைமையிற்தானே எத்தும்படி விற்றிருத்தலிது ஆச்சரியமோ.

வியப்பாயவியப்பிலாமெய்ஞ்ஞானவேதியனைச்..... .....*
சயப்புகழார்பலர்வாழுந்தடங்குருகூர்ச்சடகோபன்.....*
துயக்கின்றிநின்றொழுதுணைத்தவாயிரத்துளிப்பத்தும்.....*
உயக்கொண்டுபிறப்பறுக்குமொளிமுன்னீர்ஞாலத்தே.....(ஈக)

வியப்பாய - வேறுசிலரிடத்தில்ஆச்சரியமானகுணங்கள்- ஒளதாரிய முதலியவைகள் - வியப்பில்லா-இவன்பக்கலிலேஅவையாவுமாயிருக்கப்பட்ட- மெய்ஞ்ஞான வேதியனை- பதார்த்தயாதாத்ம்யத்தையுண்டாக்குகின்ற வேதத்தில் பிரதிபாதிக்கு மவனை-சயப்புகழார்பலர் வாழும் - இத்திருநக்ஷத்ரம் ஜயித்திருக்கும் புகழையுடையார் பலராலேவாழப்பட்ட- தடங்குருகூர்ச்சடகோபன்- துயக்கின்றி - அயர்வறுமன்றிவு - அறுதியுயிருக்கு மிந்தத்திராவிட வேதத்தை விசயம்விபரியஸ்லாமலறிந்து- தொழுதுணைத்தவாயிரத்துளிப் பத்தும்- ஒளிமுன்னீர் ஞாலத்தே - உயக்கொண்டுபிறப்பறுக்கும்- உஜ்ஜீவிக்கப்பண்ணிப்பிரபுதிபடுத்தும்-

அவதாரிகை

பட்டர்திருக்கோட்டியூருக்கெழுந்தருளியிருக்கையில்அவர்திருத்தம்பியார்சோமபிள்ளைசென்று ஆழ்வார் பரமபதத்தில்பரவாசுதேவனையனுபவிக்க வாசைப்பட்டுநோவுபடுகிறார்எல்லர்- அவதாரங்களிலனுபவிக்கவாசைப்பட்டுப்பிறப்பாடாலே மென்றுநோவுபடுகிறார்எல்லர் - உகந்தருளின நிலங்களான அர்ச்சாவதாரங்களிலே அனுபவிக்க விழிந்தவர்மேல்மெல்ல அனுபவிக்கும தொழியஇழந்தோமென்று நோவுபடுகைக்குக் காரணமென்னென்று கேட்க, பட்டர் (அடி-ம் பக்கத்தில் சொல்லியிருக்கும்) சுருதிகளைச்சொல்லி- பரமபதநாதனுக்கும் - அர்ச்சாவதாரத்துக்கும் பேதமில்லாமல்வேதபுருஷன் அர்ச்சாவதாரத்தில்பிரபத்திசெய்திருக்கிறபடியாலும்ஸ்ரீவேசுவரன் அர்ச்சாவதாரத்தில் குணபரிபூரணனேயிருக்கும்-கடலருகே போகாநின்றால் தன்கண்ணுக்கு காணலாமவனன்றோ காண்பது- அப்படியே அழகுடைய ஸௌந்தரியாதிகள் மூழுதுமனுபவிக்கலாயிருந்ததில்லை - பெருவிடாய்ப் பட்டவன்சுத்தநீர்த்தடங்கிட்டியிருக்குமாறுபோல் துடிக்குமாப்போல் அளவிடவொண்ணாதவிஷய மாகையாலே அளவிட்டுஅனுபவிக்கவொண்ணாதாயிய - இதுஅமித விஷயமென்றறியமாட்டாதே தம்முடையகரணங்களோசத்தாலே பகவத்விஷயத்தைப்பரிபூரணமாயனுபவிக்கக்கூடாற்றில்லையென்றறுஸ்தித்துச்சோகிக்க-நீர்காணஸங்கோசத்தாலே வந்ததென்று சோகிக்கவேண்டா, காணஸங்கோசமில்லாதநித்யசூரிகளும் நம்மையநுபவிக்குமிடத்தில் இப்படியே காணும்படிவந்ததென்று இவர்வ்யஸனத்தைப் பரிஹரிக்கயத்தனப்பட்டு நீர்நினைத்தபடியாறுகைக் கோதவடக்கில் திருமலையில்நின்றும் அக்கோவிலனுபவியுமென்று தான்அங்குநிற்கிறநிலையைக்காட்டிஸ்மாதான பண்ண ஸமாஹிதராய்த் தலைக்கட்டுகிறார்.

க- பாசுரம்.

கலிவிருத்தம் - பண்-சீகாமம்-தாளம்-ஏழொத்து

இதைஇப்போதுமுகாரிராகத்திலும் அடதாளத்திலும் பாடிக்கொண்டுவருகிறார்கள்.

உன்னைவணங்கிவழிப்படுகைக்குடலாகக் கரணகளேபங்களைகொடுத்தாய்-நான் அவற்றைக்கொண்டு சரீரபோஷணத்துக்குறபோய் இதரதேவதைகளிடத்தில் பிராவண்ணியத்தைப் பண்ணி அழித்தப்பட்டுப்போனேன் இப்படிப்பட்டநான்னைக் கிட்டுவதுருநாள்சொல்லவேண்டுமென்கிறார்.

மூந்நீர்ஞாலம்படைத்தவெம்முகில்வண்ணனே ... ...*
அந்நாணீதந்தவாட்கையின்வழியுழல்வேன்..... ... .*
வெந்நாரெஞ்ப்வீ பவினைகளேவோறப்பாய்ந்..... ... ...*
தெந்நாள்யானுன்னையினிவந்துகூடுவெனே..... .....*

முந்நீர்-ஆற்றுநீர்-ஊற்றுநீர்- வருஷிக்கும்நீர் - என்றுசொல்லும்மூவகைப்பட்டஜலத்தையாதல்-அன்றிக்கே-மூன்- பிரதமத்திலே-நீர்-ஜலத்தைப்-படைத்த-திருஷ்டித்த-உ-உசும் - பக்கங்களில் சொன்னவிவரப்படி மனுஷ்யிருஷியில்-அபஷவஸஜாதா॥ ஆதியில் ஜலத்தைச்சிருட்டித்துஅதில்மூலப்பிரகிருதி யாகிறவித்தை எறிந்தான்அந்தப்பீஜமானது ஸ்வர்ணமயமானவண்டங்களாய்அதில்ப்ரம்மனைப்படைத்தானென்று சொல்லியிருக்கையால் முதலில்ஜலத்தில்ஜ்ஞத்தைச்சிருட்டித்ததற்குச்சுருதி - உ - ச-சு-ய்-ய்க-ய்உ-ம் - பக்கங்களில்கண்டு கொள்வது-வெந்தாள்- வெஞ்சிறை யென்றுப்போலே எம்பெருமானைப் பூணமாயனுபவிக்கப்பெறுத லெறுப்பாலே ஞரமானதாளென்கிறார்-நோய்- அஹங்கார - அர்த்த - காமாதிகளாகிறவியாதிகள்-வீய-நசிக்கும்படி- வினைகளை - பாபங்களை -வேரற-முதலற-பாய்ந்து-போக்கி-எந்நாள்யானுன்னை யினிவந்துகூடுவெனே-நான்வந்து உன்னைக்கிட்டிவேறுகநீபார்த்துவைத்தநாளைச் சொல்லாயென்கிறார்.

வன்மாலையமனந்தவெம்வாமனனின்..... .....*
பன்மாமாயப்பல்பிறவியிற்படிகின்றயான்.....*
தொன்மாவல்வினைத்தொடர்களைமுதலரிந்து..... ... ...*
தின்மாதாள்சேர்ந்துநிற்பதெஞ்ஞான்றுகொலோ..... ... (உ)

கொல்லாமாக்கோல்கொலைசெய்துபாதப்போர்..... .....*
எல்லாச்சேனையுமிருநிலத்தவித்தவெந்தாய்..... .....*
பொல்லாவாக்கையின்புணர்வினையறுக்கலுறேன்..... ... ...*
சொல்லாயானுன்னைச்சார்வுமீதார்குழ்ச்சியே..... ... .(ஊ)

கொல்லா-கொல்லுகைக்குச்சாதனமல்லாத-மாக்கோல்-குதிரை யோட்டுகிறசமட்டியில்-கொலைசெய்து- வதசாதனமாக்கிக் கொண்டு-பாரதப்போர்-பாரதயுத்தத்தில்- எல்லாச்சேனையும்-உபயசேனையும்-இருநிலத்து-தர்மம்சூக்ஷ்மரூபமான குருக்ஷேத்ரத்திலே- அவித்தவெந்தாய்- பொல்லா - வெருதோஷித்தோடி கூடி வேயமிருக்கிற-தூக்கையின்-சரீரத்துக்குஹேதுவாய் - புண்-புண்ணாகுகிற-வினை-பாபமானது-அறுகல் - சேதித்தல் - நீக்கியிருக்கிற

லும்-அரு-ராவணன்தலைபோல்முனையாதிற்கும்-ஓர்சூழ்ச்சி- ஒருபத்தை - சொல்லாய்-சொல்லு.

சூழ்ச்சிஞானச்சுடரொளியாகியென்றும்..... ....*
எழ்ச்சிக்கேடிலன்றிபெங்கண்ணிறைந்தவெந்தாய்..... ....*
தாழ்ச்சிமற்றெங்குந்தவிர்த்துதின்ருளிணைக்கீழ்..... .....*
வாழ்ச்சியான்சேரும்வகையருளாய்வந்தே..... .....(சு)

சூழ்ச்சி-ஸர்வவியாப்தமான-சுருதி-யஷ ஆத்மாநமந்தரோயமயஸி பரவரைருவன்ஆத்மாக்களுக்கந்தராத்மாவாயிருக்கின்றானென்னும்- புருஷிருக்தத்தில்-அந்தர்பஹிஶ்சதத்ஸர்வம்வ்யாப்ய நாராயஸ்திதஃ॥ ஆத்மாக்களுக்குள்ளும்புறம்புமாய் நாராயணன் வியாபித்திருக்கிறானென்றுசொல்லிச்-சேதனாசேதனப்பிரபஞ்சமடங்கலும் அவனுடைய சரீரமாகையால் வியாப்தியைச்சூழ்ச்சியென்கிறது-ஞானச்சுடரொளியாகியானப்பிரபையையுடையனாய்க்கொண்டு-என்றும் - எப்போதும் எழ்ச்சி-விகாரமும்-கேடு-ஸங்கோசமும்-இன்றி-இல்லாதது-எக்காலும்-ஸர்வதேசத்திலும்-நிறைந்த - பரிபூரணனாய்வியாபித்திருக்கிறஎந்தாய்-எனஸ்வாமி-மற்றெங்கும் - உன்னைவிட்டுஸகலவிஷயங்களிலும்-தாழ்ச்சி-நீசகிருத்தியத்தை- தவிர்த்து- விட்டு -தின்ருளிணைக்கீழ் வாழ்ச்சி-கைங்கரியலம்பத்தை-எந்தை-எழுந்தருளி- யான்சேரும் வகையருளாய்.

வந்தாய்போலேவந்துமென்மனத்தினேநீ..... .....*
சிந்தாமற்செய்யாயிதுவேயிதுவாகிற்..... ... .*
கொந்தார்காயாவின்கொழுமலர்திருநிறத்த.. ....*
எந்தாயானுன்னையெங்குவந்தணுகிற்பெனே..... .....(கூ)

வந்தாய்போலேவந்தும் - ஸ்ரீபிரகலாதன் - ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்குவந்தாப்போலே வருகிறதுமன்றியில் - என்மனத்தினேநீ-என்மனஸையறிந்துதரிப்பிக்கும்நீ - உருவழிந்தவற்றை யுண்டாக்கவல்லநீ-சிந்தாமல்செய்பாய் - இதுதன்னைநாயுருகிப் போகாதபடி செய்கிறிலை- இதுவேயிதுவாகில் -உன்னையொழிய மங்கிப்போகை இதுக்குஸ்வபாவமாய்-இதுமங்கக்கொடுத்துப்பார்த்திருக்கை உனக்கு ஸ்வபாவமாய்விட்டதாகில்-கொந்தார்காயாவின்கொழுமலர்திருநிறத்தவெந்தாய்- யானுன்னையெங்குவந்தணுகிற்பெனே -எந்தஸாதனத்தைப்பண்ணிக்கிட்டத்தக்கஸமர்த்தனுவேன்.

பிற்பெண்பிலேனென்றிலென்முன்னுரைத்தால்..... .....*
அற்பசாரங்களைவுலவத்தகன்றொழிந்தேன்..... .....*

பற்பல்லாயிரமுயிர்செய்தபரமாநின்... .....*
நற்பொற்சோதித்தாளணுகுவதெஞ்ஞான்றே.....(சு)

இற்பென் - விஹிதகருமங்களையநுஷ்டிக்கிறதில் ஸமர்த்தன்- இல்லேன்நிஷித்த கருமங்களைவிடுகையில் ஸமர்த்தன்-என்றிலனீ- என்று சொல்லமாட்டேன்- அவையாவன - ஸ்ரீபாஞ்சராத்திரத்தில்- ஆநுகூல்யஸ்யஸங்கல்ப:।। ஆநுகூல்யங்களைச் செய்கையும்- ப்ராதிகூல்யஸ்யவர்ஜநம்।। ப்ராதிகூல்யங்களை விடுகையும்- ரக்ஷிஷ்யதீதிவிஶ்வாஸோ ஈசுவரன் நம்மை யவஶ்யம்ரக்ஷிப்பனென்கிறநம்பிக்கையும். கோப்த்ரு த்ववரணந்ததா।। இப்படி நம்பிக்கை யிருந்தாலும் என்னைரக்ஷியென் றுஇடைவிடாமல் ப்ரார்த்திக்கையும்- ஆத்மநிக்ஷேபம்।। தன் ஆத்மாவை ஈசுவரன் பக்கத்தில் சொன்னவிவரப்படி பத்திநசையில் ஸமர்ப்பிக்கையும்- கார்பண்யம் (நீசனேனிறை வொன்றுமிலேன்) என்றிவரருளிச்செய்தபடியே நைச்யாநுஸந்தானஞ்செய்கையும் -ஷட்விதா ஶரணாகதிகளாகிற இந்த ஆறுவகை யாயிருக்கும்- இவற்றில் ஆத்மஸமர்ப்பணமானது அங்கியாயும்மற்றவையதற்கு அங்கங்களாயு மிருக்கும்- அங்கங்களைபுகுந்த பின்பு அங்கியாகிய ஆத்மஸமர்ப்பணஞ்செய்ய வேண்டுமென்று சின்னவாம் ப்ரதாயஸ்தர் பக்ஷம்- தென்கலைபார் பக்ஷம்ஆத்மஸமர்ப்பணம் ப்ரதமத்தில்செய்தபின்பு (அவகாத சுவேதம்போலே) அங்கங்கள் கூடினவளையில் அநுஷ்டிக்கவேண்டு மென்பதாம்(அவகாதசுவேத மாவதுஒருகாலப்பாட்டில்ப்ரவேசித்தால் வேர்வைத் தன்கடையாய்ப்பிறக்கை) தென்கலையார்பக்ஷத்துக்குப் ப்ரமாணம் ஷஷ்பாஞ்சராத்திரத்தில் ஏதத்பரமவிஜ்ஞாய।। ப்ரபத்திரேநோபதிஶேத்।। சித்தென்கிறவாத்மாபர மஹித்தாகிறவீசுவரனுடைய ஸித்தியில் இவன்பண்ணும்ப்ரபத்தியுபாய மாகமாட்டாது- விபர்யயேணாத்மா இவனைப்பெறுகிற காலத்தில்- நைவாஸ்ருத்ப்ரதிமேதாயபாத்யம்।। இவனுடைய பாதங்கள்தடங்கல்செய்யமாட்டாதென்றதில்- இவன்பண்ணும் ப்ரபத்தியானது உபாயமாகமாட்டாதென்றிருக்கையால்அங்கங்களோடுகூடிப்ப்ரபத்திபண்ணவேண்டுமென்கிறநியமமில்லை- ஆழ்வாரும் (பாதமடைவதன்பாகத்தில் மேலுமற்றவன் பாசங்கள்முற்றும் விட்ட) என்றருளிச்செய்தபடி

த்துமின்புமற்றவன்பாசங்கள்முற்றும்விட்டதாயருளிச்செய்கையால் அங்கத்தோடேப்ரபத்திபண்ணவேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லை-சமுத்திரத்திலிலங்கையோயுங்காலத்தில் விபீஷணன் அங்கத்துடன்செய்வது.

எஞ்ஞான்றுநாமிருத்திருந்திரங்கிநெஞ்சே.....*
மெய்ஞ்ஞானமின்றிவினையியல்பிறப்பழுந்தி.....*
எஞ்ஞான்றுமெங்குமொழிவறநிறைந்துநின்ற.....*
மெய்ஞ்ஞானச்சோதிக்கண்ணனேமேவுதுமே.....(எ)

எஞ்ஞான்றும்-ஸர்வகாலமும்- இருந்து - இரங்கி-கூப்பிட்டு-நெஞ்சே-மனசே-மெய்ஞ்ஞானமின்றி - விஹிதயியல்-பாபகருத்தியமான-பிறப்பு-ஜன்மத்திலே- அழுந்தி- நாம்-மெய்ஞ்ஞானச்சோதிக்கண்ணனேமேவுதுமே - நம்மால்கிட்டப்போமோ - அன்றிக்கேமெய்ஞ்ஞானச்சோதிக்கண்ணனெ யெஞ்ஞான்றுமேவுதுமென்றஅதுவயமாகவுமாம்.

மேவுதற்பவினைகளைவிடுத்துநிலேன்.....*
ஓவுதலின்றியுனகழல்வணங்கற்றிலேன்.....*
பாவுதற்சீர்க்கண்ணாவென்பரஞ்சுடரே.....*
கூவுகின்றேன்காண்பானெங்கெய்தக்கூவுவனே.....(அ)

கூவிக்கூவிக்கொடுவினைத்தூற்றுணின்று.....*
பாவியேன்பலகாலம்வழிதிகைத்தலமருகின்றேன்.....*
மேவியன்றுனிலைதாத்தவனுலகமல்லாத்.....*
தாவியவம்மானெங்கெய்தினிதகலப்பெய்வனே.....(கூ)

வழிதிகைத்து-மோக்ஷத்தையடையும்மார்க்கந்தெரியாமல்- அலமருகின்றேன் - அலட்டிப்படுகிறநான்-அறிவுகெட்டுத்தடுமாறுகிறநான்- எங்கினிதகலப்பெய்வனே - எங்கேனகிட்டப்போகிறேன்.

நகலப்பெய்காலநமன்றமர்பாசம்விட்டால்.....*
அகலப்பூணுண்ணுமவ்வல்லலெல்லாமகலக்.....*
கலப்பலஞானத்தென்கண்ணனைக்கண்டுகொண்டு.....*
நிகழப்பெற்றென்னெஞ்சம்பெற்றதுநீடியிதே.....(ஙு)

நமன்றமர்-எமதூதர்- நகலப்பெய்காலம் - கிட்டிவருகிறகாலத்திலே-பாசம்விட்டால் - கயிற்றைவிசிஇழுத்தால் - அகலப்பூணுண்ணும் - இவனுக்குத்தாயுத்ராதிகளிடத்திலேயுண்டான பாசமிங்கிழுக்க-அவர்களுடைய பாசம்தன்னைக்கயிழுக்க-இவ்விரண்டு பாசத்தாலும்-அகலப்பூணுண்கிற- அவ்வல்லலெல்லாம்

லாம்-அகல-போகும்படியாக - சுருதி -நகலுபாகவதாயயவிஷயம்க
ஶ்ருண்வி॥ பாகவதர்கள் விஷயத்தில்இயன்பிரவேசிக்கமோட்டா னன்
றேயென்றும்-கீதையில் - ப்ரதிஜானீஹிமாமேவீரநமேபக்தாப்ரணஶ்யதி॥ஓ
ப்அருச்சுனனே!என்பக்தன்நாசத்தில்பிரவேசிக்கமாட்டானென்றுநீபிர
திக்ஞைபண்ணென்று மருளிச்செய்தபிரமாணத்தைநினைத்துஅவ்ய
ல்லலெல்லாமகலவென்றருளிச்செய்கிறார். கலக்கம்ஞானத்து- ப
ல்கலைகளாலே அறியப்பட்டவனுன - எம்கண்ணனை - கீதையில்
வேதைஶ்சஸர்வைரஹமேவவேத்யஃ॥ எல்லாவேதங்களினாலும்அறியப்படும
வனுனேயென்று ஸ்ரீவிஶ்வரூபத்தில் தன் மார்பைத்தொட்டு
க்காட்டினஎன்கிருஷ்ணனைக்-கண்டுகொண்டு - இவனேகாரணவஸ்
துவென்று (சாந்திரசூக்ஷ்மக்களாலே) சாக்ஷாத்கரித்து-என்னெஞ்
சம்-என்மனஸ-நிலைப்பெற்று-தரிக்கப்பெற்றது - உயிர் - ஆத்மா-நி
லைபெற்றது - நித்தியத்வத்தைப்பெற்றது -சுருதி - ஶ்ருண்வைதேஅ
ம்ருதஸ்யபுத்ராஃ॥ மருமங்களைவிட்டு எம்பெருமான் திருவடிகளையு
பாயமாகப்பற்றுவதிலுலே (அமிர்தமாகிய) நாசமில்லாதபரம பத
த்தையடைகிறனென்று சொல்லுகையால் நித்தியமானபரம பதத்
தைப்பெற்றதென்னவுமாம்.

உயிர்களெல்லாவுலகுமுண்டவனைக்.....*
குயில்கொண்மச்சுலத்தன்குருகூர்ச்சடகோபன்.....*
செயிரில்சொல்லிசைமாலையாயிரத்துள்ளிப்பத்தும்.....*
உயிரின்மேலாக்கைபூணிடைபொழிலிக்குமே.....(ஙஅ)

செயிர்-குறை - குற்றம் - இல்- இல்லாமை - குற்றமற்றஇயல்
யும்-இசையையுமுடையமாலை - உயிரின் மேலாக்கை பூணுடைபொ
ழிலிக்கும்-உயிரின்மேலேவந்த - உளன் - மாம்ஸத்தையுடைய-பூ
த்தை-சரீரத்தை- ஒழிவித்தும்-நசிப்பித்து- சுருதி - பரமம்ஸாம்யமு
பேத்॥ பரமமானஸமானத்துவத்தையடைகிறனென்றதில் எம்பெ
ருமானைபொத்த திருமேனியையடைகிறனென்றும் - சுருதி
ஹிரண்மயபுருஷ॥ ஸ்வர்ணமயமான திருமேனியையுடையவனென்
னையால் மாம்ஸத்தையுடைய சரீரத்தையொழித்து ஸ்வர்ண
மயதிருமேனியைபும்- சுருதி-ஸர்வஸுபேஸ்வர்வரந்॥ ஐஸ்வர்யபரி

ர்ணனுடைய திருமேனியையுடையவனென்றுஞ் சொல்லுகையா
ல் தர்க்கந்தத்தையுடைய சரீரத்தையொழித்துத்திவ்வியகந்தத்தை
யுடையசரீரத்தைக்கொடுக்கும்,

நூ-ம். திருவாய்மொழி.

நிலைப்பெற்றென் னெஞ்சும்பெற்றது நீயியென்று கண்ண
னுக்கண்டு கொண்டு தான் நித்தியத்துவத்தைப் பெற்றபடியால்
அரு -ம் பக்கத்தில் பரமபதநாதனுக்கும் அர்ச்சாவதாரத்துக்கும்
பேதமில்லையென்று சொன்னவருத்திப்பிரமாணத்தாலேமுன்சொன்
னவிவரப்படி இச்சரீரத்தோடேயிருக்கு நாள் வடக்குத்திருமலையி
ல்கைங்கரியஞ்செய்யப்பாரிக்கிறார் - பாரிக்கிறதாவது போஜனத்தி
லிருக்கும் பிரீதி இலையகலப்படுத்துமாப்போலே ஸர்வகாலத்திலும்
ஸர்வாவஸ்தைகளிலும் ஸர்வவிதகைங்கரியஞ்செய்ய நினைக்கை.

க - பாசுரம்.

கலிவிருத்தம்-பண்-பழந்தக்காகம்-தாளம் -ஏழைஞாத்து.

இதை இப்போது ஸௌராஷ்டிர ராகத்திலும் அடதாளத்தி
லும் பாடிக்கொண்டுவருகிறார்கள்.

ஒழிவில்காலமெல்லாமுடனுய்மன்னி.....*
வழுவிலாவழிமைசெய்யவேண்டுதாந்.....*
தெழிகுரலருவித்திருமலைவேங்கடத்.....*
தெழில்கொள்சோதியெந்தைதந்தைதந்தைக்கே.....*

ஒழிவில்காலமெல்லாம்-முடிவில்லாதகாலமெல்லாம் - உடனு
ய்-இளயபெருமாளைப்போல் விட்டுப் பிரியாமல் - மன்னி-கிட்டி-
வழுவிலாவழிமைசெய்ய- ஒன்றையும்விடாமலெல்லாக்கைங்கரியங்க
ளுஞ்செய்ய-வேண்டுதாம்-மிதழி-கம்பீரம்-குரல்-தொனி-கம்பீரத்வ
னியுடைய-அருவி-அருவிகளுடைய - திருமலையில்-எழில்-சௌந்தரியத்தை - கொள்-கைக்கொண்ட- சோதி-ஜோ
திர்மயமான திருமேனியுடைய-எந்தை - ஸ்வாமியான - தந்தை
தந்தைக்கே - ஸர்வகாரணபூதனுக்கு அடிமை செய்யவேண்டுமெ
ன்றதாத்பர்யம்.

எந்தைதந்தைதந்தைதந்தைதந்தைக்கு.....*
மூத்தவானவர்வானவர்கோளெழில்.....*
சிந்தாமணிமுழைத்திருவேங்கடத்.....*
சந்தமில்புகழ்க்காகொழிலண்ணலே.....(உ)

பகஷிநிமித்தம் எய்தவேடனுக்குத்தன் சரீரத்தையறுத்துத்தாசிலே
த்தினனவனுடைய வம்சத்திலவதரித்துச் சரணமடைந்தவம்பேரில்
வில்தொடுத்தீரோயென்ன ஸ்வாமி லஜ்ஜித்து(அப்போதுதன்பிராண
னவிட்டுவிடவேண்டிய ஸமயமாயிருந்தது) விவாஹகாலேரதிஸம்ப்ர
மோகேப்ராணாம்ஸ்யஜேஸர்வதனாபஹாரே॥விப்ரஸ்யசார்தே=ஹ்யனृதம்வதேயம்॥
பஞ்சாநிபஞ்சாஹுரபாதகானி॥என்றும் (அந்தப்வியோயாடிடத்து மம்ம
டவார்த்தம்மிடத்தும்- இந்தவுயிர்பிழைக்கு மென்றிடத்தும் - முந்த
த்-தனக்கனத்தம் வந்திடத்துஞ் சந்நிதைக்குந் தோறும்- கனக்கனதீ
தபொய்சொல்லலாம்)என்கிறபடியேயமக்கும் தம்மூடையவம்சஸ்த
ருக்கும்அனர்த்தமுண்டாகும்படியிருந்தபடியாலுல்விமோசிதரை
க்கஷ்ரோபாணந்தித்தேனென்றுசொல்லி அவன்பிரார்த்திதப
டியேயமகம்மேருவுக்குவடக்கு(மதுரைக்குநீர்மை) என்றவிடத்திலுள்ள
(உயத) வெள்ளம்மாகஷர்களை அந்தஒருபாணத்தால்நீருறப்பண்ணி
விட்டார்-இவ்விடத்தேபட்டர்ஒருஇதிஹாஸம்அருளிச்செய்வர்.மொ
ட்டத்தலையனொருவன்களத்தில் நெல்வழக்கிக் கொண்டிருக்கையில்
அக்கேயொருவன்சென்றுதயிரைப்பிணந்தகுழலைசையநீர்தளிம்ப
தின்றுகிரமப்படிதீர்சென்ன-நம்மைக்குழலுளரைச்சொல்லினை
ன்று ஒரு கோட்டைநெல்கொடுத்தான்-அதைக் கொண்டிவராநிற்க
ச்செய்தேஎதிரேயொருவன்வந்துஇதுஎங்கேபெற்றதென்னமொட்
டைத்தலையன் தந்தானென்ன-அவன்இவனருகுசென்றுஇன்னுமுண்
மைவதுபோகநீர்றுறென்ன-அடாவன்நெல்லுங்கொண்டுஎன்
னையும்வைதுபோவதேயென்றுதொடர்ந்துவர- இவன்புரிந்தபர்
த்து என்தான்குழல்களேயவையுரவாநின்றதியென்ன- ஒரோ
மில்லிஇன்னமொருகோட்டைநெல்கொடுபோகச்சொல்ல வந்தே
னென்றுபோல்வருணன்மேல்விட்டவம்பை மதுகாந்தரத்திலிவி
டாநிற்க- தாங்கள்தங்கட்கு நல்லனவேசெய்வார்- தங்களுக்குஹித
மானதைச் செய்யப்பட்ட வர்கள்-வேங்கடத்துறை வார்க்கு- திருவேங்
கடத்தானுக்கு- நமோவென்னலாம்- சேவிக்கிறேனென்னலாம்- சே
விக்கிறவர்களுக்கு நல்லரம்பரமபதமுண்டோவென்னில்-இதரதேவ
தைகளைத்தொழுகூடாதென்று - ரூபம்பக்கத்தில் பிரமாணங்கள்
சொல்லியிருக்கையால் அவனைத்தொழுதகைகளினாலேஇதரதேவதை
களைத்தொழாமல்-கடன்மையது சுமந்தார்க்கேற - அவனுக்கடிமை
என்றவர்த்தத்தைத்காட்டுகிறவாக்கியத்தைக்கடலுலகுசுமந்தகொண்
டிருக்கிறபோதைக்கு முன்றுவிதகடன்களும் சரீரவ்யுத்தமான
பாபங்களும்வேம்.

தேவருடையகடனையும் - ப்ரஜயாபித்ருப்யஃ॥புத்ரிஷோத்பத்திசெய்து
பிதருக்களுடைய கடனையுநிவர்த்திக்கக்கடவனென்று சொல்லியிரு
க்கை- திருவேங்கடமுடையான் திருவடிகளேயாஶ்ரயித்தமாத்ரத்தி
லே இம்மூன்றுகடன்களும்-மேவும் என்றபடி-இதற்குப்ரமாணம்-ஶ்ரீ
பாகவதத்தில்- விமக்ருஷ்ணம்ப்ராஹ்மணஸ்த்வதோயே தேஷாம்ராஜன்ஸர்வயஜ்ஞ
ஸ்ஸமாப்தாஃ॥ ஓப் பரீக்ஷின்மஹாராஜனே எந்தப்பிராம்மணன் ஶ்ரீகரு
ஷ்ணனேநீதானவனென் றறிகிறிலனே அவனுக்கு விரோதிருக்கின்ற
யக்ஞியங்களேயெல்லாம் ஸமாப்தி பண்ணினவனாகிறானென் றருளி
ச்செய்தார் - மெய்மேல் வினைமுற்றவும்மேவும் - மெய்மேல் - சரீ
ரத்தின்மேலேயிருந்தே - வினைமுற்றவும் - சகலபாபங்களும்- வே
ம்- தஹிக்கப்படும் - அன்றிக்கே - மெய்மேல்வினை - சரீரஸம்
பந்தத்தால் வரக்கடவ பாபங்களென்னவுமாம் - ஆகச்கடன்கள்-
மெய்மேல் வினைமுற்றவும் - மேவும் - நசிக்குமென்று இங்ஙனே
யானதந்தாருளிச்செய்யும்படி- இதை எழுபெருமானூர் கேட்ட
ருளி இதற்கு மேதாந்தத்தில்சொல்லுகிற கட்டளையிலே பொருளா
கவைமையாதோவென்று இங்ஙனே யருளிச்செய்வர் - அதாவது
ஈரஞ்ஜி- ஊத்தரபூர்வாஶுமோரஶ்லேஷவிநாஶௌ॥ என்று ஆகம்-பாபம்-பூர்
வாகமாவது ஆரப்திக்கப்படாயிருப்பதற்கு முன்புசெய்தபாபங்கள்,
உத்தராகமாவது ஆரப்திக்கப்பட்டு பலன்கொடுத்துமுடிவதற்கு முன்பு செய்தபாபங்கள்-
நத்தி பூர்வபாபக்ஷயமென்றும் ப்ரமாதத்தால் தன்னடையே விளைப்பட்
டதென்றும் இரண்டுவகைகளாகச் சொன்னவை ஒவ்வொன்றிரண்டு
வகைப்பட்டிருக்கையால் இவை யநேகமும்நசிக்குமென்றும் - மற்
றொருசுருதியில்- ஏவம்ஹாஸ்யஸர்வேபாப்மானஃப்ரதூயந்தே॥ ஞாழற்பூ
-அக்கினியில்விழுந்த எப்படி உருமாய்ந்து போய்விடுமோ) அப்ப
டி- ஸர்வேபாப்மானஃ॥ ஸகலபாபங்களும்-ப்ரதூயந்தே॥நன்றாகவேம்
என்கையால் பூர்வாகம் -உத்தராகம் - அவைகளில் புத்திபூர்வீகபாப
ம்- ப்ரமாதிகமாய்ச்செய்தபாபங்கள் யாவற்றும் வேம்-அன்றி- கட
ன்கள்-கடன்களும்- மேல்-அதற்குமேலே - வினைமுற்றவும்-புத்திபூ
ர்வபாபங்கள் அபுத்திபூர்வபாபங்களும்- வேம்-தஹிக்கப்படும்-மெ
ய்-இது வத்தியம்- வருணன்மேல்கோபித்து ப்பாணப்ரயோகஞ்
செய்ய அவன்சரணமடைந்து கையும் ஶ்ருவுமாய் நிற்கிறதிலேயி
ருந்து இச்சை ஸ்வாமி, ஏழுலகுக்கும்தனியே யுழிக்கப்பிள்ளை பிறந்திரு
க்கும்முன்பே பாட்டன் திருச்சக்கரவர்த்தி தன்னைச்சரணமடைந்

சமந்தமாமலர்நீர்சுடர்தூபங்கொண்.....*
டமர்ந்தவானவர்வானவர்கோவெனும்.....*
நமன்றெழுந்திருவேங்கடநன்மாட்டுச்.....*
சமன்கொள்வீடுதருந்தடங்குன்றமே.....(எ)

(பவிஷ்யத்புராணத்தில்-சதகோபஇதி ஸ்மிருதஃ॥ மத்குரோர்ஹம்பவிஷ்யாமி॥ நேதுஃ த்ராமிடவேதத்தைவெளிப்படுத்த சடகோபனென்றுசொல்லும்படி நான் அவதரிக்கிறேனென்றும்-தாம்ரபர்ண்யுத்தரதடிதாந்தே ப்ரதிஷ்யதிந நித்ரம் த்ரிஸ்ருத்வம்கதா த்ரபுஜகாதிபஃ॥ தாமரபர்ணியின் உத்தரதீரத்தில் ஆதிசேஷன் புளியமரங்களுக்குராஜனுய் உறங்காப்புளிய மரமாய்அவதரிக்கப்போகிறானென்றுஞ்சொல்லியிருக்கிறபடியே இக்ருதயுகாதிபிரம்மாண்டாதி பதினெண்புராணங்களில் யாவருக்கும்பரமபதம் கொடுக்கத்திருவுள்ளமாகிப்பூர்வகாலத்தில்தாம் வராஹ அவதாரஞ்செய் தருளினஸ்ரீவராஹ க்ஷேத்ரத்தில் (பரமபதத்திலிருக்கும் விரஜாநதியானது ஸ்ரீரங்கத்தில்காவேரியாயும் காஞ்சியில்வேகவதியாயும் அவதரித்திருக்கிறதுபோல்)திருவேங்கடத்தில்ஸ்வர்ணமுகிநதியாகவும் ஆதிசேஷனானது திருமலையாகவும் அவதரிப்பித்து அத்தால்சேஷகிரிஎன்னுந் திருநாமத்தால் பிரசித்தமாய் ருஷிகள் சொல்லப்பட்டிரா நின்றுள்ளதிருமலையாழ்வாரை)- வானவர் - ருத்ரேந்த்ராதிதேவர்களும் - வானவர் கோவெனும்- பிரம்மாவோடேகூட- மாமலர்-நீர்-சுடர்-தூபம் - தூபம்- சமந்துகொண்டு- அமர்ந்து-அங்குவாலஞ்செய்து - நமன்று-சேவித்து-எழும் - உஜ்ஜீவிக்கும்- திருவேங்கடமென்கிற - தடங்குன்றம்- விசாலமானதிருமலை யாழ்வாரே-சமன்கொள்- ஸ்ரீமந்நாராயணனைப்போல்மானத்துவத்தைக்கொடுக்கும்-வீடு-பரமபதத்தைத்-தரும்-கொடுக்கும்-சுருதிகளில்-ஸ்வேனரூபேணாபிநிஷ்பத்யதே॥ தன்திருமேனியைப்போன்றரூபத்தையடையும்படிகொடுக்கிறானென்றும் ப்ரஹ்மவேதப்ரஹ்மைவபவதி॥ பிரம்மத்தையறிந்தவன் பிரம்மத்தைப்போன்றதிருமேனியையடைகிறானென்றும் சொல்லியிருக்கின்றது-இவ்வாக்கியத்தை அத்வைதிகள் பிரம்மத்தோடே ஐக்யமாகிறானென்றும் அர்த்தஞ்சொன்னார்கள் - அதுசுருதிவிருத்தம் - மற்றொருசுருதியில்- நிரஞ்ஜனஃபரமஸாம்யமுபைதி॥ பாபமில்லாதவனுப்பரமசாம்யத்வத்தையடைகிறானென்றுசொல்லுகையாலும்அர்த்தமிது

மிபெயர்த்தாப்போல்கீதையில்- மமஸாதர்ம்யமாகதஃ॥என்னுடைய தர்மத்தை யடைகிறானென்று கண்ணன்ஐயமற வருளிச்செய்தையால் பிரம்மத்தோடு ஐக்யஞ்சொல்லும் அத்வைதிகள் பக்ஷம்நிராகரிக்கப்பட்டது - ஆனால்பரப்ரம்மமன்றோதன் ஸமானத்துவத்தையடையும் படிசெய்கிறது திருமலைகொடுக்கு மென்பது எப்படிசேருமெனில்சுருதி- ஸயேனான் ப்ரஹ்மகமயத்॥ அந்தப்பாஷவதர்களான ஆசாரியர்களே பரப்ரம்மத்தை யடையும்படி செய்கிறார்களென்று சொல்லியிருக்கையால் பாகவதர்களில்தலைவரான ஆதிசேஷனுடைய அவதாரமான திருமலையாழ்வாரே தருவர்-இதுவரையில் அனேகம் ப்ரகாரணக்களில் ஸ்தூலரூபியாயிருக்கும் எம்பெருமானுக்கும் (அர்ச்சா) ரூபத்துக்கும் பேதமில்லையென்று சுருதிகளில் சொல்லியிருக்கிறபடியேயும் சுருதி - யேயேனதாதாகச்சதிதேவே நஸஹச்சதி॥ எம்பெருமான்எங்கெங்கே அவதரித்திருக்கிறாரோஅங்கெங்கேகூடநித்யரூரிகள் அவதரிப்பர்கள் என்கிறபடியேயும் ஆதிசேஷனும்அர்ச்சாவதாரமாகிஎம்பெருமானுக்குத் திருமாலைபோலாயவர்களித்திருக்கும்-அர்ச்சாவதாரத்துக்கும் பரமபதநாதனுக்கும்பேதமென்று நிஜைக்கில் - மாத்ருயோனிபரிக்ரஹாயாஸ்துல்யமாஹலர்ஷணீயா॥ மாத்ருயோனிபரிக்ரஹபண்ணபாபத்தில் போவர்களென்று புராணங்களில் சொல்லியிருக்கிறபடி.

ஒன்றுமந்திக்குவீர்மழுதாத்தவன்.....*
அன்றுலகளந்தபிரான்பான்.....*
சென்றுசேர்திருவேங்கடமாமலை.....*
ஒன்றுமேதொழுதம்வினையோயுமே.....(அ)

பரன்சென்றுசேர்திருவேங்கடம்-என்றபதத்துக்கு அர்த்தம் சுருக்கம் - பக்தத்தில் (சித்தபூமகிழும்) என்றபாசுரத்தில் சொல்லப்பட்டது- ஒன்றுமேதொழுதம்வினையோயுமே என்றது- ஸயேனா ப்ரஹ்மகமயத்॥ என்றசுருதியின் அர்த்தம்.

புலம்புபுப்பிறப்பிறப்புப்பிணி.....*
யுமாறுசெய்வான்திருவேங்கடத்.....*
தாயநான்மலராமறத்தாமரை.....*
யுள்ளுமனத்துள்ளும்வைப்பார்கட்கே.....(க)

ஓயும்-ஆர்த்தியையுண்டாக்குகிற - ஓப்வையுண்டாக்குகிற- மூப்பு - பிறத்தனம்-பிறப்பு - இறப்பு- பிணி-இவைகளே - வீயுமாறு-இனிவராமல்நசிக்கும்படி - செய்வான்-செய்கிறவன் - திருவேங்கடத்து - திருவேங்கடத்திலெழுந்தருளியிருக்கின்ற-ஆயன்-கண்ணன்-அதுயாருக்கென்னில் நாண்மலராம் - நூதனபுஷ்பமாகநிற்கிற-அடித்தாமரை-திருவடிகளே - வாயுள்ளும் மனத்துள்ளும் வைப்பார்கட்கே-அன்றிக்கே - திருவேங்கடத்தாயன் நாண்மலராமடித்தாமரை வாயுள்ளுமனத்துள்ளும்வைப்பார்கட்கு-மூப்பு-பிறப்பு-இறப்பு-பிணி-ஓயும்-நிவர்த்தியாகும்- பிணிவீயுமாறுசெய்வான் திருவேங்கடத்தாயனென்று அவனுடையவுவயம்.

வைத்தநாள்வரையெல்லைகுறுகிச்சென்..... ...*
றெய்த்தினைப்பதன்முன்னமடைமினே..... ...*
பைத்தபாம்பணையான்திருவேங்கட..... ...*
மொய்த்தசோலையமாய்பூந்தடந்தாள்வரை.....(ய)

வைத்த (இவனுடையகருமத்தை யனுஸரித்து மலமூத்திரங்களுடன்கூடியிருக்கிற சரீரத்தில்) வைத்திருக்கிற - நாள்வரைக்காலத்தினுடைய-எல்லை-முடிவு - குறுகி-கிட்டி - எய்த்து-சைதல்லியத்தையடைந்து-இளைப்பதன்முன்னம் - ஆர்த்தியையடைகைக்குமுன்பே - தாள்வரை - திருமலையடிவாரத்தைசென்றடைமினே.

தாள்பரப்பிமண்டாவியவீசனே..... ...*
நீள்பொழிற்குருகூர்ச்சடகோபன்சொற்..... ...*
கேழிலாயிரத்திப்பத்தும்வல்லவர்..... ...*
வாழ்வர்வாழ்வெய்திஞாலம்புகழவே.....(ஙக)

கேழ்-ஒப்பு - கேழில்-ஒப்பில்லாத - ஆயிரத்து-ஆயிரத்தையுடைய - இப்பத்தும்வல்லவர்-வாழ்வர் - வாழ்வெய்தி-ஞாலம்புகழவே - விசேஷிக்கியதேத்துகையன்றிக்கே பாமரஜனங்களும் பிரதியோடேபுகழப்பெறுவர்கள்.

ச-ம் திருவாய்மொழி.

அவதாரிகை.

ஸோ (ஒழிவில்காலமெல்லா முடனுய்மன்னி - வழுவிலாவழிமைசெய்யவேண்டிநாம்) என்று அடிமைசெய்யப்பார்த்தார்.

என்காதலுனக்கில்தோழி - (மண்டிணிஞாலமும்மேற்கடல்

சூழ்விசும்புங்கழியப்பெரிதால்) என்கிறபடியே இவருடைய காதல்பூமிக்குள்கடலுக்கும் ஆகாசத்துக்கு மதிகமாய்ப் பெருகியிருக்கையால் ஆணப்பதிக்குச் சோள்ப்பொரிபோலாக்க ஒண்ணுதென்று தான்பாமபத்தத்தில் நித்தியசூரிகளால் சேவிக்கப்பட்டிருக்கிற வாகாரத்தையும் - மூலப்பிரகிருதிக்கும் பஞ்ச பூதங்களுக்கும் பிரம்மருத்ராக்கினி இந்திரசூரியசந்திராதி தேவர்களுக்கும்- மனுஷிய பசுபக்ஷியாதி இஜ்ஜகத்துக்கும் வேதசப்தங்களுக்கும் அதன் பொருளுக்கும் மற்றுமுண்டான சகலபதார்த்தங்களுக்குந் தான் காரணனுப் அவர்களுக்கந்தராத்மாவாயிருந்து அவர்களுடைய சகலதுக்காதிகள் தன்னையணுகாதிருக்கிற வாகாரத்தையுங்காட்டிக் கொடுக்க, பெரும்பசியன்பெருங்காற்றில் உதிர்ந்தபழங்களெல்லாவற்றையும் நிரூபமாசைப்பட்டு ஒன்றையும்பொறுக்கவகாசமில்லாமல் தடுமாறுமாப்போல் அத்தைச் சொல்லுவதேனே இத்தைச் சொல்லுவதேனென்று அலமருகிறார்.

க- பாகரம்.

ஆசிரியவிருத்தம்-பண்-நாட்டம்-தாளம்-ஒன்பதொத்து.

இதைஇப்போது யமுனைகலியாணி ராகத்திலும் ரூபகதாளத்திலும் பாடிக்கொண்டு வருகிறார்கள்.

